REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2023 ஒக்டோபர் 7 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

වරු. 91 இல. 238 | Saturday 07, October, 2023 | 10 பக்கங்கள் | 50/-


பொருளாதார நெருக்கடி காரணமாக

## நாட்டை விட்டு புத்திஜீவிகள் வெளியேறினரென்பதை ஏற்க முடியாது

**நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனரென்று குறிப்பிடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் மேற்கொண்ட தவறான தீர்மானங்களை திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை தெரிவித்த அவர், புத்திஜீவிகள்

06

## ஜனாதிபதி குறுகிய அரசியல் நோக்கில் செயற்படுபவரல்ல

**சபையில் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



குறுகிய அரசியல் நோக்கத்துடன் ஜனாதிபதி செயற்படவில்லை என்றும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளையும் ஜனாதிபதியே முன்னெடுத்தார் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது என்றும், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

சிங்கள சமூகத்தின் வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி செயற்படுகிறார் என்று குறிப்பிடுவதை

06

கொள்ளுப்பிட்டி இ.போ.ச. பஸ் விபத்தில்

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 05 இலட்சம் ரூபா நிதியுதவி



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்பு**

கொழும்பு, கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகில் நேற்று (06) காலை இலங்கை போக்குவரத்து சபை பஸ் மீது மரமொன்று முறிந்து விழுந்து விபத்துக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா நிதி உதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார். ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க,

06

கொழும்பிலிருந்து மத்துகம பயணித்த

# பயணிகள் பஸ் மீது பாரிய மரம் முறிந்து விழுந்து 05 பேர் மரணம்

**04 பேர் படுகாயம்; ஆஸ்பத்திரியில் அனுமதி**





**கொள்ளுப்பிட்டி டுப்ளிகேஷன் வீதியில் லிபர்ட்டி சுற்றுவட்டத்தருகே கோரம்**

கொழும்பு, கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகில் டுப்ளிகேஷன் வீதியில் நேற்று (06) காலை பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டியொன்றின் மீது பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததில் 5 பேர் உடல் நசுங்கிப் பலியாகியுள்ளனர்.

அவர்கள் 5 பேரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்ததாகவும், உயிரிழந்த 5 பேரும் ஆண்களென்றும், மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காயமடைந்த நான்கு பேர் மாத்திரம் சிகிச்சைக்காக மருத்துவமனையில்

06

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் உருவான

## Digital பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்தும் வேலைத்திட்டம்

**எதிர்வரும் 11ஆம் திகதி முதல் ஆரம்பம்**




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தை துரிதப்படுத்தும் வேலைத்திட்டத்தை எதிர்வரும் 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்க தொழில்நுட்ப அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதற்கு இணையாக அரச மற்றும் தனியார் துறையினர் ஒன்றுபட்டு டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை செயற்படுத்தும் முறைமையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் டிஜிட்டல் பொருளாதார முறைமையினூடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய பங்களிப்பு

06

மீன்பிடிப் படகுகளுக்கு 02ஆம் கட்டமாக

## இலவச மண்ணெண்ணெய் விநியோகத் திட்டம் ஆரம்பம்

**சீன அரசினால் 4.5 மில்.லீ. மண்ணெண்ணெய் நன்கொடை**



இலங்கைக் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக உதவி அடிப்படையில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் விநியோகிக்கும் இரண்டாம் கட்ட செயற்றிட்டம் கடந்த 02ஆம் திகதி முதல் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 15 கடற்றொழில் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட, நேரடியாக கடற்றொழிலில்

06

## அபாய நிலையிலுள்ள வீதியோர மரங்களை அகற்றுமாறு பணிப்பு

**பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நேற்று அதிரடி உத்தரவு**



வீதியோரங்களில் அபாய நிலையில் முறிந்து விழும் மரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பணித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், சுற்றாடல் அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, உள்ளூராட்சிமன்றங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு பணித்துள்ளார்.

வீதியோரங்களில் விழும் அபாயத்திலுள்ள பெரிய மரங்களை உடனடியாக

06

கொழும்பில் ISIS தாக்குதல் அச்சுறுத்தல்

## அரசாங்கம் உண்மைத் தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்

**அரசாங்கத்திடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பில் பயங்கரவாதத் தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பான உண்மைத் தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இது தொடர்பாக பாராளுமன்றத்துக்கு விசேட அறிவிப்பொன்றை விடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், பயங்கரவாதத்தை

06



**நிர்மாணம், மீன்பிடி, உற்பத்தித்துறைகளில் இலங்கையருக்கு கொரிய வேலைவாய்ப்பு**

2023 இல் இதுவரை 5,091 பேர் பயணம்

03



அரசியல் ஸ்திரத்தன்மையின்றி

**எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

03



**தனியார் பஸ்ஸுடன் டிப்பர் வாகனம் நேருக்குநேர் மோதி கோர விபத்து**

பஸ் சாரதி ஸ்தலத்தில் பலி; 15 பேர் காயம்

03

மயிலத்தமடு மேய்ச்சல்தரை பிரச்சினை

## த.தே.கூட்டமைப்பு எம்.பிக்கள் சபையின் நடுவே ஆர்ப்பாட்டம்

**சபையில் சில நிமிடங்கள் அமைதியின்மை**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மட்டக்களப்பு, மயிலத்தமடு மேய்ச்சல்தரை பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நீதி வழங்கக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்த போராட்டத்தினால் நேற்று சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கம், த. கலையரசன், வினோ நோகராதலிங்கம், எஸ்.சிறீதரன் ஆகியோர் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட பாராளுமன்ற

06

பூநகரியில் பெண் காரில் கடத்தல்

## ரூ. 07 இலட்சம் பெறுமதியான தங்கநகைகள் கொள்ளை



பூநகரி பிரதேசத்திலுள்ள பஸ் தரிப்பிடமொன்றில் நின்ற பெண் ஒருவரை காரில் வந்த மூவர் கடத்திச் சென்று அவரிடமிருந்த தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக, பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண்ணிடமிருந்து 745,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளே கொள்ளையிடப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

06

## சஜித்திடம் ஆட்சியை ஒப்படைக்கும் அளவுக்கு நாட்டு மக்கள் மூடர்கள் அல்ல

**அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் நாட்டின் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைக்குமளவுக்கு இந்த நாட்டு மக்கள் ஒன்றும் மூடர்கள் அல்லவென்று துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு பொய் கூறாமல் உண்மையைத் தெரிவித்தே அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதாகவும் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

06

## மும்பையில் 07 மாடி கொண்ட குடியிருப்பில் பயங்கர தீ விபத்து

**7 பேர் பலி; 40க்கும் மேற்பட்டோர் காயம்**

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**



இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள மும்பையின் கோரேகான் பிரதேசத்தில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று (06) பரவிய தீயில் சிக்கி 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

கோரேகான் பிரதேசத்தில் எம்.ஜி. வீதியில் 7 மாடிகளைக் கொண்ட ஜெய் பவானி கட்டடத்திலேயே இத்தீ

06

'நிகழ்நிலை காப்பு' சட்டமூலம்:

## உயர் நீதிமன்றத்தில் மேலும் இரண்டு மனுக்கள் தாக்கல்

**குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் சபையில் அறிவிப்பு**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

'நிகழ்நிலை காப்பு' சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மேலும் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக, குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கூடிய போது,

06

## வடமேல் மாகாண பாடசாலைகளுக்கு காட்டு யானைகளினால் அச்சுறுத்தல்

**240 பாடசாலைகள் அடையாளம்; 179 பாடசாலைகள் மிகவும் ஆபத்தில்**



வடமேல் மாகாணத்திலுள்ள 240 பாடசாலைகளுக்கு யானைகளினால் அச்சுறுத்தல் நிலவுவதுடன், அவற்றில் சுமார் 179 பாடசாலைகள் மிகவும் ஆபத்து நிறைந்தவையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் முதிதா ஜயரத்ன தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின் உயர்கல்வி வலயத்திலுள்ள 38 பாடசாலைகளும் நிக்கவெரட்டியவிலுள்ள 57 பாடசாலைகளும் இப்பாகமுவவிலுள்ள 4 பாடசாலைகளும்

06

## அநுராதபுரம் கும்பிச்சங்குளத்தில் மீன்கள் திடீரென உயிரிழப்பு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் கும்பிச்சங்குளத்தில் பல்வேறு வகைகளைக் கொண்ட ஆயிரக்கணக்கான மீன்கள் இறந்து குளக் கட்டுக்கு அருகில் குவிந்து கிடப்பதாக, பிரதேச மக்கள் தெரிவித்தனர். கும்பிச்சங்குளம் நடைபாதையில் உடற்பயிற்சி செய்வதற்காக நேற்று (06) சென்ற ஒருவருக்கு துர்நாற்றம் வீசியதையடுத்து, அந்த இடத்துக்குச் சென்று பார்த்த போது, மீன்கள் இறந்து கரையொதுங்கியும் மிதந்தும் இருப்பதை அவதானித்துள்ளார்.

06

# சர்வதேச செய்திகள்

# சிறையிலுள்ள ஈரானியப் பெண்ணுக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பு



ஈரானிய சமூக செயற்பாட்டாளர் நர்கிஸ் முஹம்மதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் பெண்கள் அடக்குமுறைக்கு எதிராக போராடியதற்காகவும், மனித உரிமைகள் மற்றும் அனைவருக்கும் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்காக அவர் நடத்திய போராட்டத்திற்காகவும் நர்கிஸ் முஹம்மதிக்கு 2023ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு வழங்க நோர்வே நோபல் அமைப்பு முடிவு செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானில் 13 முறை கைது செய்துள்ள நர்கிஸ் ஐந்து முறை குற்றவாளி என்று தண்டனை அளிக்கப்பட்டுள்ளார். இதனால், மொத்தம் 31 ஆண்டுகள் அவர் சிறைத்தண்டனையுடன் 154 கசையடிகளையும் பெற்றுள்ளார். நர்கிஸ் முஹம்மதி தொடர்ந்து சிறை அனுபவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌதீகவியல மாணவியான முஹம்மதி, சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளுக்காக போராடுபவராக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். ஈரானிய பெண்களுக்காகப் போராடி சிறையில் அடைக்கப்பட்ட சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உதவுவதற்கான முயற்சிகளுக்காக 2011 ஆம் ஆண்டில் முதன்முறையாக கைது செய்யப்பட்டார்.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு பல ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

பிணையில் வெளிவந்த முஹம்மதி, ஈரானில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு எதிரான போராட்டங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அவரது இந்த போராட்டம், 2015ஆம் ஆண்டு மீண்டும் அவர் கைது செய்யப்பட்டு, கூடுதலாக சில ஆண்டுகள் சிறைக்குப் பின் இருக்கும் நிலையை உருவாக்கியது.

மருத்துவம், பௌதீகவியல், இரசாயனவியல், இலக்கியம் ஆகிய துறைகளுக்கான நோபல் பரிசுகள் இதுவரை அறிவிக்கப்பட்ட நிலையல் அமைதிக்கான நோபல் பரிசு நேற்று (06) அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வரும் திங்கள்கிழமை (9) அறிவிக்கப்படவுள்ளது.

## சிரியாவில் இராணுவ கல்லூரியில் ட்ரோன் தாக்குதல்: 100 பேர் பலி



சிரியாவின் ஹோம்ஸ் நகரில் உள்ள இராணுவ கல்லூரி ஒன்றின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டு பல டஜன் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் கல்லூரியில் இடம்பெற்ற பட்டமளிப்பு நிகழ்வு ஒன்றை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் உள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு "அறியப்பட்ட சர்வதேச படைகளின் ஆதரவு பெற்ற பயங்கரவாதக் குழுக்கள்" மீது சிரியா குற்றம்சாட்டியுள்ளது.

எனினும் சிரிய உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் கிளர்ச்சியாளர்கள் அல்லது ஜிஹாதிக்களைச் சேர்ந்த எந்தத் தரப்பும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்கவில்லை. ஹோம்ஸ் நகரின் எதிர்ப்பாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள வடமேற்கு பகுதியில் இருந்தே இந்த ஆளில்லா விமானம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து அரச எதிர்ப்பாளர்களின் கோட்டையான இத்லிப் மாகாணத்தில் நகரங்கள் மற்றும் கிராமங்கள் மீது அரச படை நடத்திய உக்கிற ஏவுகணை மற்றும் பீரங்கி தாக்குதல்களில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டதாக 'வைட் ஹெல்மட்' அமைப்பு தெரிவத்துள்ளது.

நண்பகலில் பட்டமளிப்பு முடிந்த விரைவில் ஹோம்ஸ் இராணுவ கல்லூரியை இலக்கு வைத்து வெடிபொருட்களை சுமந்த பல ஆளில்லா விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக சிரிய ஆயுதப் படைகளின் பொது கட்டளையகம் அந்நாட்டின் சனா செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 200க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாகவும் கொல்லப்பட்டவர்களில் ஆறு பெண்கள் மற்றும் ஆறு சிறுவர்கள் இருப்பதாகவும் சுகாதார அமைச்சர் ஹசன் அல் கப்பாஷ் தெரிவித்துள்ளார்.

இந்த பட்டமளிப்பு விழாவை அலங்கரிக்க உதவிய ஆடவர் ஒருவர் கூறியபோது, "விழா நிகழ்ச்சிக்குப் பின்னர் எல்லோரும் கீழே உள்ள முற்றவெளிக்கு சென்றபோது வெடிப்புகள் இடம்பெற்றன. அது எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. தரையில் உடல்கள் சிதறிக் கிடந்தன" என்றார்.

சிரியாவில் 2011 இல் இடம்பெற்ற அமைதியான ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களை ஜனாதிபதி பஷர் அல் அஸாத் அரசு ஒடுக்க முயன்றதை அடுத்தே அங்கு உள்நாட்டு போர் வெடித்தது. இதில் அரை மில்லியனுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைன் கிராமம் மீது தாக்குதல்: 51 பேர் பலி



உக்ரைனின் வடகிழக்கு கிராமம் ஒன்றின் மீது ரஷ்ய ஏவுகணை தாக்கியதில் குறைந்தது 51 பேர் கொல்லப்பட்டு மேலும் ஆறு பேர் காயமடைந்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர் இடம்பெறும் குப்பியான்ஸ் முன்னரங்கு பகுதியில் இருந்து சுமார் 30 கி.மீ தொலைவில் இருக்கும் ஹ்ரோசா என்ற கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை உணவகம் மற்றும் கடை ஒன்றில் மீது ஏவுகணை விழுந்துள்ளது. தாக்குதல் இடம்பெறும்போது பொதுமக்கள் பலரும் அங்கிருந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் ஆறு வயது சிறுவர் ஒருவரும் இருப்பதாக கார்கிவ் பிராந்திய ஆளுநர் ஒலே சின்ஹுபொவ் தெரிவித்துள்ளார்.

சுமார் 330 பேர் மாத்திரமே உள்ள அந்த கிராமத்தில் தாக்குதல் இடம்பெறும்போது குறித்த உணவக விடுதியில் மக்கள் நினைவஞ்சலி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றிருந்ததாக உள்துறை அமைச்சர் இஹோர் கிளிமன்கோ தெரிவித்துள்ளார்.

"ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு வீட்டில் இருந்தும் இந்த நினைவஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தனர். இது ஒரு பெரும் சோகம் நிறைந்த ஒன்றாகும்" என்று கிளிமன்கோ உக்ரைன் தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

தாக்கப்பட்ட பகுதியில் குடியிருப்பாளர்களைத் தவிர இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை என்று உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

எனினும் இது தொடர்பில் ரஷ்யா எந்த பதிலும் அளிக்கவில்லை. பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை ரஷ்யா இதற்கு முன்னர் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் தாக்குதல் இடம்பெற்ற கிராமம் அமைந்திருக்கும் குபியன்ஸ்க் மாவட்டத்தில் உக்ரைனிய இலக்குகள் மீது 20 ஏவுகணை மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தியதாக ரஷ்யா நேற்று (06) தெரிவித்தது.

19 மாதங்களுக்கு முன்னர் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் கார்கிவ் பிராந்தியத்தில் அதிக உயிரிழப்புக் கொண்ட தாக்குதலாக இது அமைந்துள்ளது.

குபியன்ஸ்க் மாவட்டம் போர் ஆரம்பித்தபோது ரஷ்ய படைகளுக்கான பிரதான விநியோகப் பாதையாக இருந்த நிலையில் பல மாத போருக்குப் பின் கடந்த ஆண்டு செப்டெம்பரில் உக்ரைனிய படை அந்தப் பகுதியை மீட்டது.

## கென்ய பாடசாலையில் பரவியுள்ள மர்ம நோய்; கால்களில் பக்கவாத அறிகுறிகள்



கென்யாவில் மர்ம நோய் பரவிவரும் நிலையில், 90க்கும் அதிகமான பாடசாலை மாணவர்களின் கால்களில் பக்கவாத அறிகுறிகள் தென்பட்டுள்ளன.

அதனால் பெரும்பாலான மாணவர்களால் நடக்க முடியவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

செயின் தெரேசாசஸ் எர்கி என்ற பெண்கள் உயர்நிலைப் பாடசாலையின் மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடக அறிக்கைகள் குறிப்பிட்டன.

அந்தப் பாடசாலை காகாமெகா எனும் நகரில் அமைந்துள்ளது.

பாடசாலை காலவரம்பின்றி மூடப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் ரத்தம், சிறுநீர் மாதிரிகளைச் சுகாதார அதிகாரிகள் சேகரித்துள்ளனர். கென்யாவின் மருத்துவ ஆய்வுக் கழகத்திற்கு அது அனுப்பப்பட்டுள்ளது.

அங்கு அந்த மர்ம நோய் குறித்து ஆராயப்படுகிறது.

மாணவர்கள் நடக்க முடியாமல் சிரமப்படுவதைக் காட்டும் வீடியோ முன்னர் ட்விட்டர் என அழைக்கப்பட்ட எக்ஸ் தளத்தில் பகிரப்பட்டு வருகிறது.

## உலகில் செப்டெம்பர் வெப்பம் சாதனை அளவுக்கு அதிகரிப்பு



கடந்த செப்டெம்பர் மாதத்தில் உலகின் சராசரி வெப்பநிலை இதுவரை இல்லாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலைக் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் உலக வளிமண்டலத்தின் சராசரி வெப்பநிலை 16.38 பாகை செல்சியஸாக (61.5 பாகை ஃபாரன்ஹீட்) பதிவாகியுள்ளது. இந்த வெப்பம், இதுவரை இல்லாத அதிகபட்ச மாதாந்திர சராசரி வெப்பநிலையாகும்.

இதற்கு முன்னர் கடந்த 2020ஆம் ஆண்டில் பதிவானதுதான் அதிகபட்ச சராசரி வெப்பநிலையாக இருந்தது. தற்போது செப்டெம்பரில் பதிவாகியுள்ள புதிய உச்சம், முந்தைய உச்சத்தைவிட 0.5 பாகை செல்சியஸ் அதிகமாகும்.

இதுவும், இதுவரை இல்லாத மிக அதிக உயர்வாகும். இதற்கு முன்னர் வரை முந்தைய உச்சநிலை வெப்பத்தைவிட புதிய உச்சநிலை வெப்பம் 0.1 பாகைக்கு குறைவாகவே அதிகரித்து வந்தது.


தொழில் புரட்சிக்கு முந்தைய 1850–1900 காலகட்டத்தின் சராசரி மாதாந்திர வெப்பநிலையுடன் ஒப்பிடுகையில், கடந்த செப்டெம்பரில் பதிவாகியுள்ள சராசரி வெப்பநிலை 1.75 பாகை செல்சியஸ் அதிகமாகும்.

இதன் மூலம், பருவநிலை மாற்றம் என்பது இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பின் வரப்போவதில்லை இப்போதே வந்துவிட்டது என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றிய பருவநிலைக் கண்காணிப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

பருவநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதற்காக பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற வருடாந்த ஐ.நா மாநாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில், தொழில்புரட்சிக்கு முன்னர் இருந்ததைவிட 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் உலகின் வெப்பநிலை உயராமல் கட்டுப்படுத்தவும், அதற்காக காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவை படிப்படியாகக் குறைக்கவும் இந்தியா உள்ளிட்ட 195 நாடுகள் ஒப்புக்கொண்டன.

இருந்தாலும், அதற்கான நடவடிக்கைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை செப்டெம்பர் மாதம் உச்சத்தைத் தொட்டுள்ள சராசரி வெப்பம் உணர்த்துவதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

## புகையை கட்டுப்படுத்த இந்தோனேசியாவுக்கு மலேசியா கோரிக்கை



மலேசியாவில் சூழ்ந்துள்ள மோசமான புகைமூட்டத்தைக் கட்டுப்படுத்த இந்தோனேசியாவையும் இதர ஆசியான் நாடுகளையும் மலேசிய அதிகாரிகள் அணுகியுள்ளனர்.

அண்மைய நாட்களில் மலேசியக் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலையை எட்டியுள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

அதற்கு அண்டை நாடான இந்தோனேசியாவில் எரியும் காட்டுத்தீ காரணம் என்று அவர்கள் குறைகூறினர்.

அதை மறுத்த இந்தோனேசியா, எல்லை தாண்டிச் சென்ற புகைமூட்டம் எதையும் கண்டறியவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் எழும் புகைமூட்டத்தை வழக்கமானதாகக் கருதிவிட வேண்டாம் என்று மலேசியச் சுற்றுப்புற அமைச்சர் இந்தோனேசிய அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மோசமடையும் அந்தப் போக்கிற்குத் தீர்வு காண்பதில் உதவும்படி ஆசியான் நாடுகளையும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதிகரிக்கும் புகைமூட்டம் ஆரோக்கியத்தை மட்டுமல்லாமல் பொருளாதாரத்தையும் சுற்றுலாத் துறையையும் பாதிப்பதாக அவர் குறிப்பிட்டார். இந்தோனேசியாவில் இந்த ஆண்டு மட்டும் இதுவரை 270,000 ஹெக்டர் வனப்பரப்பு தீக்கிரையானது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 7 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 12.00
அஸர் - 03.16
மஃரிப் - 05.59
இஷா - 07.09

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 21
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# நிர்மாணம், மீன்பிடி, உற்பத்தித்துறைகளில் இலங்கையருக்கு கொரிய வேலைவாய்ப்பு

## 2023 இல் இதுவரை 5,091 பேர் பயணம்



தென்கொரியாவில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 5,091 பேர் தொழில் வாய்ப்புகளை பெற்றுச் சென்றுள்ளதாக, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலப்பகுதியில் 3,460 தென்கொரியாவில் தொழிலுக்காக சென்றிருந்ததை தொடர்ந்து, இந்த வருடத்தில் முதல் 9 மாத காலப்பகுதயில் இந்தத் தொகை 44 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமைச்சர் மனுஷ நாணயக்கார கடந்த செவ்வாய்க்கிழமை (03) தென்கொரியாவுக்கு பயணமாகினார்.

இலங்கையர்களுக்கு மேலும் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக தென்கொரிய உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை, கொரிய உற்பத்தித்துறையில் தொழில் பெற்ற 54 இலங்கையர்கள் கடந்த செவ்வாய் (03) இரவு தென்கொரியா சென்றுள்ளதுடன், உற்பத்தி மற்றும் மீன்பிடித் தொழில்த் துறைகளில் தொழில் வாய்ப்புகளை பெற்ற 36 பேர் கடந்த புதன் (04) தென்கொரியாவுக்கு சென்றுள்ளனர். இந்த வருடத்தில் 4,991 ஆண்கள் தென்கொரியாவுக்கு சென்றுள்ளனர்.

இலங்கை இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் கொரிய நாட்டின் தொழிலுக்காக சென்ற முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இதற்கமைய இளைஞர்கள் 100 பேர் குறுகிய காலப்பகுதியில் தென்கொரியாவுக்கு பயணமாகியுள்ளனர்.

உற்பத்தித்துறை தொழிலுக்காக 4,100 ஆண்களும் 98 பெண்களும் சென்றுள்ளனர். கட்டுமாணத்துறை தொழிலுக்காக 147 ஆண்கள் சென்றுள்ளனர். மீன்பிடித்தொழில் துறையில் 741 ஆண்களும் 2 பெண்களும் சென்றுள்ளனர். விவசாயத் தொழில் துறைக்கு 3 ஆண்கள் சென்றுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கும் தென்கொரிய மனிதவள அபிவிருத்திச் சேவை நிறுவனத்துக்கிடையே எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமைய இலங்கையர்களுக்கு தென்கொரியாவில் தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமையவே கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இலங்கையர்கள் தென்கொரியாவுக்கு தொழிலுக்காக செல்வதுடன், தென்கொரியாவில் தொழிலுக்காக செல்வதில் இளைஞர்கள் கூடுதல் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## 2024 வரவு செலவுத் திட்டத்தில் யோசனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான வெற்றிடங்களை அடுத்த வருடத்தில் நிரப்ப முடியுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதற்கான நிதியை இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர், "நாட்டில் பத்து பட்டப் பின்படிப்பு நிறுவனங்கள் உள்ளதுடன், அவை பாடங்களுக்கான கட்டணத்தை அறவிட்டே கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. எனினும், அரசாங்கமும் அவற்றுக்கு நிதியை வழங்குகின்றது.

தற்போதைய பிரச்சினை என்னவெனில், நாட்டில் நிலவிய கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானது அல்லவென்பதே. இதில் இரண்டு பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஒன்று நிதி ஒதுக்குதல், மற்றையது தட்டுப்பாடு. அந்த வகையில், கல்விசார் ஊழியர்களுக்கான 1,054 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அமைச்சரவை அனுமதி பெறப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றவர்களை மீண்டும் சேவையில் இணைக்கும் நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்கள் ஆரம்பித்துள்ளன. எனினும், அதில் மேலும் 126 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அடுத்த வருடத்துக்கென இவற்றை நிரப்புவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைத்துள்ளேன். அதன் மூலம் கல்வித்துறை சார்ந்த வெற்றிடங்களை அடுத்த வருடத்தில் நிரப்ப முடியும்.

இது தவிர, தொழில்நுட்ப உதவியாளர்கள் போன்ற கல்விசாரா ஊழியர்களுக்கும் வெற்றிடங்கள் நிலவுவதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நிதியை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

# மக்கள் எதிர்பார்க்கும் தலைவருக்கு எமது அணி தலைமைத்துவம் வழங்கும்

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

மக்கள் எதிர்பார்க்கும் தலைவருக்கு தமது அணி தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்ப்பதாக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு, வெள்ளவத்தை மயூராபதி ஆலயத்தில் நேற்று (06) நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.







எதிர்கால அரசியல் நடவடிக்கை தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தொடர்ந்து பதில் வழங்கிய அவர்,

'நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான தலைவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்துக்கு தெரிவு செய்யப்படுவார்.

எமது அணியில் இளைஞர் அணியினர் பலரும் உள்ளனர். எதிர்காலத்தில் அவர்களுக்கு ஆதரவை வழங்கி முன்கொண்டு செல்ல எதிர்பார்க்கிறோம்.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வகையிலான சிரேஷ்ட பிரஜை ஒருவருக்கு கட்சி தலைமைத்துவத்தை வழங்க எதிர்பார்க்கிறது. மக்கள் ஏற்றுக்கொள்ளும் உறுப்பினருக்கு தலைமைத்துவம் வழங்கப்படும்.

மக்களே எனக்கும் தலைமைத்துவத்தை வழங்கினார்கள் எதிர்காலத்திலும் அவ்வாறே இடம்பெறும்" எனத் தெரிவித்தார்.

நீண்டகாலமாக பொதுவிடங்களுக்கு செல்வதை தவிர்த்து வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது நாட்டின் பல்வேறு வணக்கஸ்தலங்களுக்கும் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் ஸ்திரத்தன்மையின்றி எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தாமல் நாட்டில் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாதென, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதனை கவனத்தில் கொண்டு அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டுமெனதெரிவித்த அவர், புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டில் பாரிய எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்திஜீவிகள் வெளியேற்றம் தொடர்பான சபை ஒத்திவைப்பவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"படித்த இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

30 வருட யுத்த காலத்தில் புத்திஜீவிகள் நாட்டிலிருந்து வெளியேறியதைப் போன்று தற்போதும் மூளைசாலிகள் வெளியேறி வருகின்றனரென்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. யுத்த காலத்தை காட்டிலும் தற்போது மூளைசாலிகள் வெளியேற்றம் தீவிரமடைந்துள்ளது.

மருத்துவர்கள் உட்பட சுகாதாரத் தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறுவது பாரதூரமானது. மருத்துவர்கள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறுவதால் சுகாதாரக் கட்டமைப்பே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நடுத்தர மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஒரு மருத்துவர் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 50 பேருக்கு சிகிச்சையளிக்க முடியும்.

ஆனால், தற்போதைய நிலையில் அரச வைத்தியசாலைகளில் ஒரு மருத்துவர் ஒரு நாளைக்கு 200க்கும் அதிகமானோருக்கு சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

சுகாதாரக் கட்டமைப்பை போன்றே பல்கலைக்கழக கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது மிகவும் பாரதூரமானது. கல்வித்துறை வீழ்ச்சியடைந்தால் சிறந்த எதிர்கால தலைமுறையினரை ஒரு போதும் எதிர்பார்க்க முடியாது" எனத் தெரிவித்தார்.

# உடப்பு ஸ்ரீவீரபத்திர காளியம்மன் கோயில் வேள்விப் பொங்கல் உற்சவம்

**உடப்பு குறூப் நிருபர்**



வரலாற்றுச்சிறப்புமிக்க உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் கோயிலின் வருடாந்த வேள்விப் பொங்கல் உற்சவம் நேற்று (06) மிகச் சிறப்பாக நடைபெற்றது. கும்பம் பாலித்தலுடன் உற்சவம் ஆரம்பமாகி விசேட பூஜை வழிபாடுகளுடன் கடல் அன்னைக்கு அபிஷேகம் மேற்கொள்ளப்பட்டது.



கச்சான் காற்றுக் காலநிலை நிறைவடையும் தறுவாயில் வாடைக் காற்றுக் காலநிலை ஆரம்பமாகும். இதன்போதே கரைவலை மீனவர்கள் தமது தொழிலை தொடங்குவது வழமையாகும். இதற்கு முன்னர் உடப்பு ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் கோயிலில் வேள்விப் பொங்கல் உற்சவம் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அமைச்சின் செயலாளர், தூதுவர் உள்ளிட்ட 07 புதிய நியமனங்கள்

## உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி



அமைச்சின் செயலாளர் ஒருவர், தூதுவர் ஒருவர் உட்பட 7 புதிய நியமனங்களுக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

எகிப்துக்கான இலங்கை தூதுவராக திருமதி எம்.ஈ.எம்.வெனின்கரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், பங்களாதேஷுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக டபிள்யூ.எம். தர்மபாலவின் நியமனத்துக்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு மேலதிகமாக, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளராக எச்.எம்.பீ.பி.ஹேரத்தின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் தொடர்பான குழு அனுமதி வழங்கியுள்ளது.

விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனத்தின் தலைவராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவராக கலாநிதி எஸ்.டபிள்யூ.எம்.ஹெட்டிகே, இலங்கை பத்திரிகைப் பேரவையின் தலைவராக பீ.எம்.எல்.பத்திரண, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ஐ.எஸ்.விஜேசேகர ஆகியோரின் நியமனங்களுக்கும் உயர் பதவிகள் தொடர்பான குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உயர் பதவிகள் தொடர்பான குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் அண்மையில் கூடியது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தனியார் பஸ்ஸுடன் டிப்பர் வாகனம் நேருக்குநேர் மோதி கோர விபத்து

## பஸ் சாரதி ஸ்தலத்தில் பலி; 15 பேர் காயம்

**கொட்டதெனிய குறுப் நிருபர்**



மீரிகம நீர்கொழும்பு வீதியால் பயணித்த தனியார் பஸ் வண்டியொன்று நேற்றுக் காலை 6.00 மணியளவில் கொட்டதெனிய, வரதலை பிரதேசத்தில் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், பஸ் வண்டிச் சாரதி உயிரிழந்துள்ளதாக, கொட்டதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்துடன் மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் படுகாயமடைந்த பஸ் சாரதி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். பஸ்ஸில் பயணித்த 15 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியதாகவும் பஸ்ஸின் முன்பகுதி முற்றாக நொருங்கி சேதமடைந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக கொட்டதெனிய பொலிஸ் போக்குவரத்து பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி, பிரதம பொலிஸ் பரிசோதகர் டொனால்ட்டின் வழிகாட்டலின் கீழ் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 21

## குறள் தரும் சிந்தனை

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து

மமதையால் பூரித்துப் போய்க் கடமைகளை மறந்திருப்பவர்கள், அப்படி மறந்து போய் அழிந்து போனவர்களை நினைத்துப் பார்த்துத் திருந்திக் கொள்ள வேண்டும்.

# ஆளுமைமிகு தலைமைத்துவத்தினால் படிப்படியாக மீண்டெழும் இலங்கை

பொருளாதாரத்தில் கடுமையாக வீழ்ச்சியுற்றிருந்த எமது நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் வெற்றியடைந்து வருவதாக சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் போது, உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் இப்பாராட்டை ஜனாதிபதியிடம் நேரடியாகவே தெரிவித்துள்ளனர்.

நாட்டை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளில் முன்னேற்றமெதுவும் இல்லையென்று இலங்கையின் எதிரணி அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்ற போதிலும், இலங்கையின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாடுகளின் தலைவர்களும், சர்வதேச அமைப்புகளின் முக்கியஸ்தர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகவே பாராட்டுத் தெரிவித்துள்ளமை விசேடமான அம்சமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்களின் போது உலகத் தலைவர்கள் பலரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அனைத்துச் சந்திப்புகளும் சாதகமான அறிகுறிகளையே புலப்படுத்துகின்றன. இலங்கையின் முன்னேற்றம் குறித்து சர்வதேசரீதியில் அனைத்துத் தரப்பினரும் சாதகமான கருத்துகளையே தெரிவித்துள்ளனர்.

எனவே இலங்கையின் எதிர்காலம் தொடர்பாக எவரும் அச்சமடையத் தேவையில்லையென்பதே உண்மையாகும். இலங்கையில் எதிரணியினர் எத்தகைய பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்ற போதிலும், அப்பிரசாரங்கள் யாவும் அரசியல் நோக்கம் கொண்டவை என்பதே உண்மை.

ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்கள் சிறந்த பலாபலன்களைத் தந்துள்ளன என்பது ஒருபுறமிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றதன் பின்னர் நாடு பெருமளவு மீண்டெழுந்துள்ளதென்பதும் தற்போது தெளிவாகியுள்ளது. இலங்கையின் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ள கருத்துகளும் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்கக் கூடிய அரசியல் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒருவர் மாத்திரமே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்அடையாளம் காணப்பட்டுள்ளாரென்பதும் இங்கு முக்கியமான செய்தியாகும். அரசியல் ஆளுமை, நிர்வாகத்திறன், கல்வித்தகைமை, நீண்டகால அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கின்ற போது நாட்டுக்குப் பொருத்தமான சிறந்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடையாளம் காணப்படுகின்றார்.

நாட்டில் கடந்தகாலத்தில் நிலவிய நெருக்கடிகளை நாம் ஒருபோதுமே மறந்துவிட முடியாது. நாட்டு மக்கள் சமைப்பதற்கான எரிவாயுவுக்காகவும், மண்ணெண்ணெய்க்காகவும் வீதியோரங்களில் நாட்கணக்கில் காத்துக் கிடந்தனர். சமையல் எரிவாயுவையும், மண்ணெண்ணெயையும் பெற்றுக் கொள்ளாமல் அவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் சென்ற சம்பவங்கள்தான் அதிகளவில் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்றுதான் வாகனங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் மக்கள் தெருக்களில் திண்டாடித் திரிந்தனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து சில கிலோமீற்றர் தூரத்துக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வாகனங்கள் கிலோமீற்றர் தூரத்துக்கு வரிசையில் காத்துக் கிடந்தன. நான்கு லீற்றர் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக மோட்டார் சைக்கிள்கள் நாட்கணக்கில் இரவுபகலாகக் காத்துக் கிடந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற அனுபவங்கள் ஏராளம்.

அவ்வாறான நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை படிப்படியாக மீட்டெடுத்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை மறந்து விடலாகாது. எரிபொருள் நெருக்கடியைத் தணிப்பதற்காக கியூஆர் கோட் முறைமையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. அதன் பலனாக எரிபொருள் நெருக்கடி பெருமளவு தணிந்தது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ வரிசைகள் முடிவுக்கு வந்தன.

அதன் பின்னர் தற்போது கியூஆர் கோட் முறைமையும் நீக்கப்பட்டு விட்டது. வாகனங்களுக்கான எரிபொருளை தாராளமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதொரு நிலைமை உருவாகியிருக்கின்றது. அதாவது எரிபொருள் நெருக்கடியென்பதே நாட்டில் தற்போது கிடையாது.

எரிபொருள் மாத்திரமன்றி, நாட்டில் ஏராளமான பொருட்களுக்கும் இவ்வாறுதான் பற்றாக்குறை அக்காலத்தில் நிலவியது. அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்க வேண்டிய நிலைமையில் மக்கள் அவதியுற்றனர். அவ்வாறான நெருக்கடிகள் இன்று பெருமளவில் குறைந்துள்ளன. பொருட்களின் விலைகள் இன்னுமே பழைய நிலைமைக்கு வராத போதிலும், ஓரளவாவது விலைகள் குறைந்துள்ளன என்பதை ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது.

நாட்டின் தலைமைத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொண்ட பின்னரே இந்த மாற்றங்கள் அனைத்தும் படிப்படியாக நிகழ்ந்தன என்பதை அனைவரும் அறிவர். அவரது ஆளுமையின் வெளிப்பாடுகளே இவையாகும்.

எனவேதான் இலங்கையின் முன்னேற்றங்கள் குறித்து உலகநாடுகளின் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் உண்மைநிலைமையை மறந்தபடி எதிரணியினர் உண்மைக்கு மாறான பிரசாரங்களை மேற்கொள்வது முறையல்ல என்பதே உண்மை.

editor.tkn@lakehouse.lk

# அந்தமான் தமிழர்களின் கலாசார கோயிலாய் அந்தமான் தமிழர் சங்கம்




அந்தமான் இந்தியாவுக்குள் உள்ள ஒரு அழகான தீவு. இங்கே பல மொழிகள் பேசும் மக்கள் வாழ்ந்தாலும். தமிழர்கள் தனித்த அடையாளத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். அந்தமான் தமிழர்கள் தங்களின் மொழியையும் கலாசாரத்தையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காக 'அந்தமான் தமிழர் சங்கம்' என்ற அமைப்பை நிறுவி மொழியையும் கலாசாரத்தையும் பாதுகாத்து வருகின்றனர்.

அந்தமான் தமிழர் சங்கம் என்பது அந்தமான் தீவுகளில் வாழும் தமிழர்களின் ஒரு தமிழ் அமைப்பாகும். இவ்வமைப்பு 1951 ஆம் ஆண்டு போர்ட் பிளேரில் தொடங்கப்பட்டுள்ளது. தமிழர்கள் வாழும் எல்லா இடங்களிலும் தமிழ்ச்சங்கம் என்று இருக்க, அந்தமான் தீவில் மட்டும்தான் தமிழர் சங்கம் என்ற பெயரில் உள்ளது. இதுவே இச்சங்கத்தின் தனிச்சிறப்பாகக் கருதப்படுகிறது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இலக்கியக் கூட்டங்கள், சொற்பொழிவுக்கூட்டங்கள், கருத்தரங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தமான் தமிழர் சங்கத்தை தலைமை இடமாகக் கொண்டு அந்தமானின் பிற உள்தீவுகளிலும் தமிழர் இருந்த இடமெல்லாம் தமிழர் அமைப்புகள் தோன்றியுள்ளன. இந்தத் தமிழர் அமைப்புகளில் பாரதி, பாரதிதாசன் விழா, பொங்கல் விழா, சித்திரை விழா எனப் பல விழாக்களும், பல்சுவை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன்.

1957 ஆம் ஆண்டில் முதன் முதலாக அந்தமான் தமிழர் சங்கத்தின் சார்பில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என அந்தமான் தமிழர் படைப்புகளை ஒன்றுதிரட்டி சித்திரைவிழா மலர் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா விடுதலை அடைந்தவுடன் அந்தமான் வாழ் தமிழ் மக்கள் கலாசாரம் மற்றும் மொழிமீது காட்டிய அக்கறையின் காரணமாக

அன்றைய தமிழினப் போராளிகளின் பொதுநல நோக்கும் தொலைதூரப்பார்வையுமே இச்சங்கம் உருவாகக் காரணமாக அமைந்தது. இன்றும் அந்தமான் தீவு தமிழ் மக்களின் கலாசாரக் கோயிலாகவும் கலங்கரைவிளக்கமாகவும், தமிழரைத் தமிழால் ஒன்றுபடுத்தி தரணி போற்ற வாழவைக்க வேண்டும் என்ற பொதுச்சிந்தனையுடன் தமிழர் சங்கம் இயங்கி வருகிறது.

1964 ஆம் ஆண்டு அந்தமான் நிக்கோபார் தீவு நிர்வாகத்திடம் முறையாக பதிவு செய்யப்பட்டு, சங்கத்திற்கென்று விதிமுறைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியக் குடிமகனாக இருப்பவர்கள் எல்லோரும் இந்தச் சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம். ஆயுள் உறுப்பினராக சேர்வதற்கு ரூ 250. கட்டணம்.

தமிழர் நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் அந்தமான தமிழர் சங்கத்தில் உறுப்பினராகி சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவலாம் என சங்கத்தின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தின் விதிமுறைகளின் நோக்கம் தமிழ் மக்களின் கல்வி நலன், பண்பாடு நலன் மற்றும் சமூக நலனைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்வது ஆகும்.

தமிழ்மொழி, கலை மற்றும் கலாசாரத்தை வளர்க்கவும், பரப்பவும் ஏதுவாக பல விழாக்களைக் கொண்டாடுவது, நூலகம் ஒன்றை நிறுவிச் செயல்படுத்துவதன் வாயிலாக அறிவார்ந்த தமிழ் உணர்வைப் புகட்டுவது, விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தி பொழுதுபோக்கு மற்றும் உடற்பயிற்சி வாய்ப்புகளை வழங்குவது, வெவ்வேறு மொழிசார்ந்த சமுகத்தினரோடு நல்லெண்ணத்தைப் பெருக்கி நல்லுறவை பேணுவது போன்றனவும் இதன் நோக்கமாகும்.

இத்தகைய சிறப்பு நோக்கங்களுடன் சங்கத்தை வழி நடத்தவதோடு, அந்தமான் தமிழர் சங்கம் எந்தவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என்பதையும் உறுதி மொழியாக வைத்துள்ளனர்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு செயல்படும் இச்சங்கம் அனைத்துக் கட்சி அரசியல் செயற்பாட்டாளர்களையும் ஒருங்கிணைத்து தமிழர் நலனுக்காக பாடுபடும் அமைப்பாகவும் செயல்படுகிறது. அந்தமான் தமிழர்களைப் பாதிக்கும் பொதுவான பிரச்சனைகளை கட்சி வேறுபாடின்றி அனைவரும் கூடி ஆராய்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஊடகமாக தமிழர் சங்கம் செயல்படுகிறது.

தமிழர் சங்கம் பல செயல்பாடுகளை சிறப்பாக செய்திருந்தாலும் 1996ஆம் ஆண்டு மீண்டும் ஒரு திருப்புமுனையாக சங்கத்தின் செயல்பாடுகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக புதிய ஆட்சிக்குழு அமைக்கப்பட்டது. அப்போது கே.எஸ் சுப்பையா அவர்களை தலைவராகக் கொண்டு புதிய ஆட்சிக்குழு பொறுப்பேற்றுக் கொண்டது







புதிய ஆட்சிக்குழு காலத்தில் 14 41996 இல் நீண்ட இடைவெளிக்குப் பிறகு சித்திரை வருடப்பிறப்பன்று சித்திரை விழா மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டுள்ளது. அதன்பிறகு சங்கத்திற்கு புதுவண்ணம் தீட்டி புதுப்பொலிவுடன் சீரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழர் சங்கத்தின் மூலம் மூன்று விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன. பொங்கல் விழா, சித்திரை விழா மற்றும் பாரதி, பாரதிதாசன் விழா.

இம்மூன்று விழாவிலும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழும் முழங்கும் வண்ணம் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தமிழினப் பற்றாளர்கள், ஆசிரியர்கர், மாணவர்கள், மற்றும் பொது மக்கள் என பலரும் இவ்விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இலக்கிய ஆர்வத்தை தூண்டுவதற்காகவும், கலையுணர்வு மற்றும் கலைத்திறனையும் பொது அறிவையும் வளர்ப்பதற்காகவும் ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டி, வினாடிவினா போட்டி, பாட்டுப் போட்டி மற்றும் நடனம் போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தி இளைய தலைமுறையினரை ஊக்கப்படுத்துகின்றனர்.

தமிழரின் வீர விளையாட்டான கபடிப்போட்டியும், மகளிருக்கான கோலப்போட்டியும் நடத்தப்படுகின்றன.



தமிழர் சங்கத்தால் நடத்தப்படும் முக்கிய விழாக்களுக்கு தாய் தமிழகத்திலிருந்து சிறப்பு விருந்தினர்களையும் தலைசிறந்த பேச்சாளர்களையும் அழைத்து இலக்கிய உரைகளும், பட்டிமன்றங்களும், கவியரங்கங்களும் நடத்தப்படுகின்றன.

பட்டிமன்றம் பேச்சாளர்கள், சாலமன் பாப்பையா, நகைச்சுவைத்தென்றல் கு.ஞானசம்பந்தம், கவிஞர் வைரமுத்து, மருத்துவர் சுகுமாரன் போன்றவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்

அந்தமானில் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக தமிழ்வழிக் கல்வியின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்தி வருகிறது. தாய்மொழிவழிக்கல்வியே இயல்பான கல்வி என்பதாலும், தாய்மொழிவழிக் கல்வி காப்பாற்றப்பட்டால்தான் தமிழரின் கலை, இலக்கியம் மற்றும் கலாசாரத்தை இம்மண்ணில் வேரூன்ற வைக்க முடியும் என்பதற்காக தமிழ்க்கல்வி மேம்பாட்டுக்குழு என்ற அமைப்பின் வழியாக தமிழ் மாணவர்களின் குறைகளை கண்டறிந்து தொடர்புடைய ஆட்சியரின் பார்வைக்கு கொண்டு சென்று தீர்வுகாணப்படுகிறது.

அந்தமானில் இந்தி பொது மக்களின் தொடர்புமொழியாக இருந்து வருவதால் தமிழ் மாணவர்களும் இந்தி மொழியை திறம்படக் கற்க வேண்டும் என்பதில் சங்கத்திற்கு மிகுந்த அக்கறை உண்டு. ஆனாலும், வேலை வாய்ப்புகளைப் பாதிக்கும் வண்ணம் இந்தியை கட்டாய தேர்வுப் பாடமாக புகுத்துவதை எதிர்த்து வருகிறது. இதற்கான நீதிமன்றம் வரை சென்று இடைக்கால தடையும் பெறப்பட்டுள்ளது.

மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவர்களுக்கு திருவள்ளுவர் சிறப்பு விருது வழங்கிச் சிறப்பிக்கப்படுகிற1996 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் பாராட்டுச் சான்றிதலுடன் ரொக்கப் பரிசுடன் இவ்விருது வழங்கப்படுகிறது. தமிழ்மொழிப்பாடத்தில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு சங்கத்தின் மூலம் தங்கப்பதக்கம் வழங்கி ஊக்குவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் தமிழ் பயில வாய்ப்பு இல்லாத தமிழ் மாணவர்களுக்காக அந்தமான் தமிழர் சங்கம் தமிழ் பயிற்சி மையம் ஒன்றையும் தோற்றுவித்துச் செயல்படுத்தி வருகிறது. ஞாயிறு தோறும் காலை 9.00 மணி முதல் பகல் 12.00 மணிவரையில் தமிழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இப்பயிற்சி மையத்தில் தமிழ் பயில கட்டணம் எதுவும் வாங்கப்படுவது இல்லை. வயது வித்தியாசமின்றி யார் வேண்டுமானாலும் இங்கு சேர்ந்து தமிழ் பயிலலாம்.

இச்சங்கத்தின் கிளை அமைப்பாக தமிழ் இலக்கிய மன்றம் ஒன்றும் செயல்படுகிறது. தமிழார்வமிக்க இளைய தலைமுறையினரை ஒருங்கிணைத்து வாரம்தோறும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அந்தமான் தீவில் தமிழன் உயிர்ப்புடன் வாழ்கிறான் என்பதை காண்பிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இம்மன்றம் செயல்படுகிறது.

இலக்கிய நிகழ்வுகளோடு நின்றுவிடாமல் பொதுச்சேவையிலும் ஈடுபட்டுவரும் தமிழர் சங்கத்தின் மூலம் 1990 இல் நடந்த கார்கில் போர், 2001இல் நடந்த குஜராத் பூகம்பம் போன்ற பேரிடர் நிகழ்வுகளின்போதும் துணைநிலை ஆளுநர் மூலம் நிதியுதவியும் வழங்கியுள்ளது.

அந்தமானில் உருவெடுக்கும் தமிழ் எழுத்தாளர்களையும் ஏனைய துறைகளில் சாதனை படைப்பவர்களையும் ஊக்குவித்து ஆதரவு தெரிவிப்பதையும் அந்தமான் தமிழர் சங்கம் செய்து வருகிறது. தமிழாசிரியருக்கான தேசிய விருது பெற்ற முதல் அந்தமான் தமிழர் சி.சக்திவேல் அவர்கள் எழுதிய 'வரலாற்றில் அந்தமான்', 'அழகிய அந்தமான்' என்ற இரண்டு நூல்களையும் வெளியிட தமிழர் சங்கம் ஆதரவாக இருந்துள்ளது.

தமிழகத்திலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் அந்தமானுக்கு வரும் தமிழ்ப்பேராளர்கள்ர்கள், அமைச்சர்கள், நடிகர்கள், போன்றவர்களுக்கு தமிழர் சங்கத்தின் மூலம் சிறப்பான வரவேற்பளித்து உறவுகளை புதுப்பித்துக்கொள்ளளவும், கருத்துத்களை பரிமாறிக்கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டிலிருந்து வரும் தமிழ் அமைப்புகளுடன் தமிழர் சங்கமும் இணைந்து பல கருத்தரங்கங்களையும், மாநாடுகளையும் நடத்தி வருகிறது.

கடந்த மே மாதம் 27052023 அன்று தமிழ்நாட்டில் திருச்சியிலிருந்து வெளி வரும் இனிய நந்தவனம் மாத இதழ் , தூண்டில் ஹைக்கூ இதழ் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ் உலக ஹைக்கூ இரண்டாவது மாநாட்டையும் நடத்தியது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இனிய நந்தவனம் பதிப்பகம் மூன் தமிழர் சங்கத்தால் நடத்தப்படும் நூலகத்திற்கு தமிழ் நூல்களும் 26,09 2023 அன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தற்போது தமிழ்நாட்டில் இயங்கிவரும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்துடன்.

அந்தமான் தமிழர் சங்கம் புரிந்துணர்வு ஒப்பத்தம் ஏற்படுத்தி இணையவழித் தமிழ்க் கல்வி விளர்ச்சிக்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

அந்தமான் தமிழர் சங்கத்தின் தற்போதைய ஆட்சிமன்றக்குழுவில் எல். மூர்த்தி தலைவராகவும், அ.தமிழ்ச்செல்வன் துணைத்தலைவராகவும், வே.காளிதாஸ் செயலாளராகவும் இருந்து சங்கத்தை வழிநடத்தி வருகின்றனர். அந்தமானுக்கு சுற்றுலா செல்லும் அனைவரும் அந்தமான் தமிழர் சங்கத்திற்கும் ஒருமுறை சென்று உறவை வளர்த்துக் கொள்ளலாம்.

**நந்தவனம் சந்திரசேகரன்...**
தமிழ்நாடு

# சிறுவர் தினத்தன்று பிறந்த பிள்ளைகளின் பெற்றோருக்கு ரூபா ஒரு மில்லியன் மதிப்பிலான இலவச ஆயுள் காப்பீடு

2023 ஒக்டோபர் 1 ஆம் திகதியன்று உலக சிறுவர் தினத்தினை முன்னிட்டு ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ் Sri Lanka Insurance (SLIC) மேலும் இன்னுமொரு பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. 2023 ஒக்டோபர் 1 ஆம் திகதியன்று நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.







நாட்டின் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் இந்த பெருநிறுவன கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு திட்டம் (CSR) 2022 இல் தொடங்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டிலும் இந்த முயற்சியைத் தொடர நிறுவனம் முடிவு செய்தது.

'இத்தேசத்தின் பிள்ளைகளுக்கு பாதுகாப்பானதோர் எதிர்காலத்தினை உருவாக்கிக் கொடுப்பதே SLIC இன் முதன்மையான நோக்கம் ஆகும். அதேவேளை பெற்றோருக்கும் எமது ஆதரவினை தொடர்ந்தும் வழங்கிடுவோம் என்று இந்த தனித்துவமான முயற்சி குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்தன எல். அளுத்கம குறிப்பிட்டார்.

'பொறுப்பான நிறுவனம் என்ற வகையில், குழந்தைகளின் நல்வாழ்வுக்கான எங்கள் அர்ப்பணிப்பு நிதி பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டது. தற்போதைய சவாலான பொருளாதார நிலைமைகளில் அனைவருதும் பாதுகாப்பிக்கு காப்புறுதி ஒன்று கட்டாயம் என்று நாங்கள் நம்புகின்றோம். இதன் விளைவாக, ஓர் சிறப்புத் திட்டமாக 2023 உலக சிறுவர் தினத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ஓர் இலவச ஆயுள் காப்பீட்டை வழங்கினோம் என்று அவர் குறிப்பிட்டார்.

SLIC யின் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சீ. பெரேரா இது குறித்து தமது கருத்து தெரிவிக்கையில், 'எமது தேசத்தின் எதிர்காலம் பிள்ளைகள் ஆவர். அவர்களுக்கு பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றை உறுதி செய்வது நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பாகும். ஓர் பொறுப்புள்ள நிறுவனமாக அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த உலக சிறுவர் தினத்தன்று இலங்கையில் பிறந்த அனைத்து பிள்ளைகளினதும் பெற்றோருக்கும் இலவச ஆயுள் காப்புறுதியை நாம் வழங்குகின்றோம் என்றார்.

# இஸ்லாமிய அறிவுக் கல்வி புகட்டும் சீரிய பணியில் அக்கரைப்பற்று உம்மு தர்தா மகளிர் இஸ்லாமிய கல்லூரி




அக்கரைப்பற்று மாநகரத்தின், மீராநகரப் பிரதேசத்தில் இயற்கை வனப்புமிக்க அழகிய இடத்தில் அமையப் பெற்றுள்ள உம்மு தர்தா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் வியத்தகு வளர்ச்சியும், அதன் கல்வி மற்றும் ஆன்மீகம் சார்ந்த செயற்பாடுகளும் இன்று அக்கரைப்பற்று மக்கள் மனங்களில் நீங்கா ஓர் இடத்தைப் பிடித்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இச்சமூகத்தின் கண்களாம் பெண்களைப் பாதுகாத்து, அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக மிளிர சிறந்த முன்மாதிரியான ஆளுமைகளாக மாற்றுவதற்கான உன்னதமான இலக்கை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற உம்மு தர்தா மகளிர் இஸ்லாமிய கல்லூரி பல்வேறு புரட்சிகரமான இஸ்லாமிய நெறிகளுடன் சமூக நல்லிணக்கத்திற்கேற்ப மாற்றங்களை நோக்கி மிக வேகமாக பயனித்துக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.



இஸ்லாமிய பெண்கள் பல சவாலுக்கு முகம்கொடுத்து தங்களுக்குள் உள்ள பிரச்சினைகளுக்கும், தங்களது சமூகப் பித்தலாட்டங்களில் மூழ்கி விடாமலும், சமூகத்துக்கு நல்ல வகையான விடயங்களை பல்துறைகளிலும் சென்றடைய வைத்து நற்சமூகத்தை உருவாக்குவதே இவர்களின் முதற்பணியாக இருக்கிறது.

2010ஆம் ஆண்டு 13 மாணவியர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி, தற்போது நூற்றுக்கும் அதிகமான மாணவியர்களை உள்ளீர்த்து இயங்கிக் கொண்டிருக்கின்றது.



வறுமை கல்விக்கு ஒரு போதும் சுமையாக அமைந்து விடக்கூடாது என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டும் வகையில் செயற்படும் இக்கல்லூரி, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற பல மாணவியர்களையும் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருக்கின்ற குடும்பப் பின்னணியைக் கொண்டுள்ள மாணவியர்களையும் உள்ளீர்த்து, வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த இஸ்லாமிய கல்லூரியில் இதுவரை 47 ஆலிமாக்கள் மௌலவிய்யா பட்டத்தைப் பெற்று பல சன்மார்க்க சமூக நிறுவனங்களில் கடமை புரிந்து வருகின்றனர். இவர்களுள் பல மாணவியர்கள் பல்கலைக்கழகத்திற்கும் கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இக்கல்லூரியின் தற்போதைய அதிபராக அக்கரைப்பற்று ஜம்மியதுல் உலமா சபையின் தலைவர் கலாநிதி அல்ஹாபிழ் எம்.ஐ.சித்தீக் (அஸ்ஹரி) இக்கல்லூரியின் வளர்ச்சியிலும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திலும் இரவுபகலாக பணியாற்றி வருகிறார்.

இன்றைய நவீன உலகில் கல்வி ரீதியாக புரட்சிகரமான மாற்றங்களை முழுமையாக உள்ளீர்த்து இக்கல்லூரி தங்களது மாணவியர்களையும் செயல்படச் செய்வதற்கான மிகச் சிறந்த கல்விசார் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் இங்கு கணனி, ஆங்கில, சிங்கள வகுப்புக்களும் மற்றும் பாடசாலை கல்வி செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் நடைபெறுகின்ற அல்குர்ஆன், அரபு மொழி மற்றும் இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த போட்டி நிகழ்ச்சிகளில் மாணவிகள் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை இக்கல்லூரி செய்து வருகின்றது.

இக்கல்லூரியில் கல்வி மற்றும் ஆன்மீக செயற்பாடுகள் தொடர்ந்தும் சிறப்புற அமைந்திருக்க வேண்டும் என்பதில் இக்கல்லூரி சமூகம் மிகக்கவனமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்...**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# பெரியவிளான் றோ.க.த பாடசாலையில் திறன் வகுப்பறை திறந்துவைப்பு



யாழ். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு(IMHOUSA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) அமைப்புகளினால் முதலாம் கட்டமாக பன்னிரண்டு பாடசாலைகளிலும், இரண்டாம் கட்டமாக ஒன்பது பாடசாலைகளிலும் திறன்பலகையுடனான திறன்வகுப்பறைகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன.






இவற்றில் இரண்டாம் கட்டத்தில் வழங்கப்பட்ட ஒன்பது பாடசாலைகளில் ஒன்றான பெரியவிளான் றோ.க.த.பாடசாலையில் திறன்வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வு சென்ற வாரம் மிகச்சிறப்பாக நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வில் திறன்பலகை தொடர்பாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களினால் , மாணவர்களுடனான பங்குபற்றுதலுடன் வகுப்பறைச் செயற்பாடுகள் மிகவினைத்திறனான முறையில் நிகழ்த்திக் காட்டப்பட்டிருந்தன.

*e class, white board, g compries* மென்பொருட்களுடன் *e thksalawa, NIE, DP* போன்ற வலய அமைப்புக்களை பயன்படுத்தியது மட்டுமன்றி, செயற்கை நுண்ணறிவு தொடர்பாக பயிற்சியின்போது வழங்கப்பட நுட்ப விடயங்களையும் தமது வகுப்பறைச் செயற்பாடுகளில் மேற்படி ஆசிரியர்கள் இணைத்திருப்பது இப்பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

இந்த ஆரம்ப நிகழ்வுகளில் வலயபிரதிநிதிகளுடன், பழைய மாணவர்கள், பெற்றோர் கலந்து கொண்டதுடன், *IMHOUSA* அமைப்பின் வதிவிடப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து கொண்டு ஆசிரியர்களை நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# தோல்வியில் இருந்து கற்றுக் கொண்ட பாடத்தின் வெற்றியே சந்திரயான் 3!



'தோல்வியில் இருந்து பாடம் கற்றுக் கொள்வதோடு, கடினமாக உழைத்தால் வெற்றி நம்மைவிட்டு எங்கும் போய்விடாது' என்று சந்திரயான் 3 திட்டம் வெற்றி குறித்து தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்கான பாராட்டு விழாவில் உரையாற்றிய இஸ்ரோ விஞ்ஞானி வீரமுத்துவேல் குறிப்பிட்டார்.

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கலையரங்கில் உயர்கல்வித் துறை சார்பில் 'ஒளிரும் தமிழ்நாடு, மிளிரும் தமிழர்கள்' என்ற பெயரில் சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகளுக்கான பாராட்டு விழா சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியை நேரலையில் காணும் வகையில், 58 இலட்சம் பாடசாலை, கல்லூரி மாணவர்களுக்கு வட்ஸ்அப் மூலம் இணைப்பு (லிங்க்) அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது.

இதன் மூலம் ஏராளமான மாணவர்கள் அந்நிகழ்ச்சியைப் பார்த்தனர். அனைத்து பாடசாலை மற்றும் கல்லூரிகளில் இந்த நிகழ்ச்சி நேற்று 6 ஆம் திகதி மறுஒளிபரப்பு செய்யப்பட்டது.

அண்ணா நூற்றாண்டு அரங்கில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், இஸ்ரோ(இந்திய விண்வெளி ஆய்வு நிலையம்) முன்னாள் தலைவர் கே.சிவன், சந்திரயான்1 திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை, சூரியனை ஆய்வு செய்ய விண்ணுக்கு ஏவப்பட்டுள்ள ஆதித்யா எல்1 விண்கலம் திட்ட இயக்குனர் நிகார் ஷாஜி, சந்திரயான் 3 விண்கலத்தின் திட்ட இயக்குனர் ப. வீரமுத்துவேல் உட்பட 9 இஸ்ரோ விஞ்ஞானிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பொன்னாடை அணிவித்து, சான்றிதழும், திருவள்ளுவர் சிலையையும் வழங்கி கௌரவித்தார். பின்னர் இந்த நிகழ்ச்சியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் உரையாற்றினர்.

சந்திரயான் 3 திட்ட இயக்குனர் வீரமுத்துவேல் உரையாற்றுகையில் கூறியதாவது:

"நான் அரசு பாடசாலையில்தான் படித்தேன். எந்தப் பாடசாலையில் படிக்கிறோம் என்பது முக்கியமில்லை. எப்படி புரிந்து படிப்பது என்பதுதான் முக்கியம். படிக்கின்ற காலகட்டத்திலேயே சின்ன சின்ன புராஜெக்ட்களை செய்து பாருங்கள். செய்முறை அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். அத்துடன் புதுப்புது தொழில்நுட்பங்களை கற்றுக் கொள்ள வேண்டும். சந்திரயான் 2 திட்டத்தில், தோல்வியைப் பார்த்து அச்சப்படக் கூடாது என்பதை நாங்கள் முதலில் கற்றுக் கொண்டோம். தோல்வியில் இருந்து பாடம் கற்றுக் கொள்வதோடு கடினமாக உழைத்தால் வெற்றி நம்மைவிட்டு எங்கும் போய்விடாது.

சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டரையும் பிரக்யான் ரோவரையும் நிலவில் தரையிறக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மட்டுமே நாம் பணியாற்றினோம். இதற்காக நிறைய சோதனைகளை மேற்கொண்டோம். நிலவு போன்ற சூழலை பூமியில் உருவாக்கி நிறைய சோதனைகளைச் செய்தோம். இதுவே எமது வெற்றிக்குக் காரணம். வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். எந்தவொரு பணியைச் செய்தாலும் முழுஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். எந்தத் துறையில் இருந்தாலும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்."

## 'கடினமாக உழைத்தால் வெற்றி நம்மைவிட்டுப் போய்விடாது' என்பது இந்திய விண்வெளி ஆய்வு நிலைய விஞ்ஞானிகளின் நம்பிக்கை

இவ்வாறு சந்திரயான் 3 திட்ட இயக்குனர் விஞ்ஞானி வீரமுத்துவேல் தெரிவித்தார்.

நிலவின் தென்துருவத்திற்கு அருகில் தரையிறங்கிய முதல் நாடு இந்தியா என்ற பெருமை என்றும் இந்தியாவுக்கு உள்ளது. கணிக்கப்பட்ட துல்லியத்துடன், நிலவில் தரையிறங்குவது ஒரு முக்கியமான சாதனையாகும். கடினமான சூழ்நிலைகளை கடந்து, நிலவின் தென்துருவம் அருகே தரையிறங்குவது, பல நூற்றாண்டுகளாக மனித அறிவின் எல்லைகளை உயர்த்த முயன்று வரும் இந்திய விஞ்ஞானிகளின் மனப்பான்மைக்கு ஒரு சான்றாகும்.

சந்திரனில் இருந்து 'பிரக்யான்' ரோவர் அனுப்பும் தகவல் வளம் அறிவை மேம்படுத்துவதோடு, சந்திரன் மற்றும் அதற்கு அப்பால் உள்ள மர்மங்கள் குறித்த அடிப்படை கண்டுபிடிப்புகளுக்கும் நுண்ணறிவுகளுக்கும் வழிவகுக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

உலகளாவிய அறிவியல் சாதனைகளில் இந்திய நாட்டை தொடர்ந்து முன்னணியில் கொண்டு சென்றுள்ளனர் இந்திய விஞ்ஞானிகள். அவர்களின் விடாமுயற்சி, தளராத ஆர்வம், சவால்களை வெல்லும் அசைக்க முடியாத உத்வேகம் ஆகியவை சர்வதேச அரங்கில் அவர்களின் நற்பெயரை உறுதிப்படுத்தியது மட்டுமல்லாமல், எண்ணற்ற மக்களுக்கு பெரிய கனவு காணவும், உலகளாவிய அறிவின் பரந்த கட்டமைப்பிற்கு பங்களிக்கவும் தூண்டியுள்ளன.

இந்தியாவின் விண்வெளித் திட்டத்தின் வெற்றிக்கு ஏராளமான பெண் விஞ்ஞானிகள் பங்களித்துள்ளனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். பெண்களுக்கு சமஉரிமை வழங்கும் நாடு இந்தியா என்பது உலக அரங்கில் பொறிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு மற்றும் முன்மாதிரியான தலைமையும் இந்த வெற்றிக்கு மற்றொரு காரணமாகும். மனித நலன் மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கான இந்தியாவின் விண்வெளித் திட்டத்தில் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கதாகும். இந்திய விஞ்ஞானிகளின் திறன்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையும், அவரது இடைவிடாத ஊக்கமும் அபாரமானவையாகும்.

ஒரு அரசின் தலைவராக தனது 22 ஆண்டுகளில், முதலில் குஜராத் மாநிலத்திலும் பின்னர் பிரதமராகவும் நரேந்திர மோடி அனைத்து சந்திரயான் திட்டங்களுடனும் உணர்ச்சிபூர்வமான பிணைப்பைக் கொண்டுள்ளார். முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயால் இத்தகைய திட்டத்தின் யோசனை அறிவிக்கப்பட்டபோது நரேந்திர மோடி முதலமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

2008 ஆம் ஆண்டு சந்திரயான் 1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டபோது, நரேந்திர மோடி இஸ்ரோவுக்குச் சென்று விஞ்ஞானிகளை நேரில் வாழ்த்தினார்.

பிரதமர் நரேந்திர மோடி எப்போதும் அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து வருகிறார். கடந்த 9 ஆண்டுகளில், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை எளிதாக்கும் தொடர்ச்சியான சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. விண்வெளித் துறையைப் பொறுத்தவரை, இந்தியாவில் தனியார் துறை மற்றும் புத்தொழில் நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகள் கிடைப்பதை பிரதமர் மோடி உறுதி செய்தார்.

சந்திரயான் 3 திட்டத்தின் வெற்றியிலிருந்து கிடைக்கும் அறிவு மனிதசமுதாயத்தின் நன்மை மற்றும் முன்னேற்றத்திற்கு, குறிப்பாக உலகளாவிய தென்பகுதி நாடுகளின் நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தப்படும் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறியதன் மூலம், பிரதமர் நரேந்திர மோடி உலகம் ஒரு குடும்பம் என்ற இந்திய காலத்தால் அழியாத நம்பிக்கையின் உணர்வை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் இந்த சகாப்தத்தில், கல்வி உலகத்துடன் தொடர்புடையவர்கள் அதிக இளைஞர்களை அறிவியலை நோக்கி ஊக்குவிக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது. சந்திரயான் 3 இன் வெற்றி இந்த துறைகளில் ஆர்வத்தின் தீப்பொறியைத் தூண்டுவதற்கும், இந்திய நாட்டில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் ஒரு மகத்தான வாய்ப்பை வழங்கியுள்ளது.




**பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்களை ஊக்குவித்து, சாதனை வீராங்கனைகளாக்கும் தேசம் பாரதம்!**

# கொட்டாஞ்சேனையில் இன்னிசையுடன் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழா

இன்னிசையும் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழா நாளை 8ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை கொழும்பு13, கொட்டாஞ்சேனை விவேகானந்தா மேட்டுத்தெருவில் அமைந்துள்ள விவேகானந்தா சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னையை சேர்ந்த சிவாச்சார்ய குலபூஷணம், இறை இசைத்திலகம் டாக்டர் சாம்பசிவமணிக் குருக்களின் ஏற்பாட்டில் அகில இலங்கை குருசாமிகள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இவ்விழா இனிதே நடைபெறவுள்ளது.

மறைந்த இலங்கை முதல் இந்து மத குருபீடாதிபதி சிவாகமபாணு, சிவபூஜாதுரந்தரர், மாந்திரீதபூவிணம் டாக்டர் ஸ்கந்த சாம்பவசிவாச்சார்யார் மற்றும் மறைந்த திரைப்பட பாடகர், இசைமேதை, இசைத்திலகம் டாக்டர் ரி.எம். சௌந்தரராஜன் ஆகியோரின் 101ஆவது பிறந்த தினத்தையிட்டும் வரலாற்று நாயகன், தவப்புதல்வன், நடிகர் திலகம் செவாலிஜர் சிவாஜிகணேசனின் 95ஆவது பிறந்த தினத்தையிட்டும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊடக அனுசரணை



இதன்போது ஆன்மிக அன்பர்கள், இசைப் பாடகர்கள், நாடக நடிகர்கள் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப் படவுள்ளனர்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, ஸ்ரீ சபரிமலைக் குருசாமி டாக்டர் ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் ஆசி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு, சென்னை மேற்கு மாம்பலம் கலியுககர்ணன், கொடை வள்ளல், தமிழ்நாட்டு இசைக் கலைஞர்களின் காவலர் மனிதநேயம் சிவாஜிரவி கலந்துகொள்ளவுள்ளார்.

ஆன்மிகம் சார்ந்தோர், இசைப்பாடகர்கள், நாடக நடிகர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு, விழா ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைத்துள்ளனர்.







# புலமைப்பரிசில் கருத்தரங்கு இன்று மில்லகந்தயில் நாளை மத்துகமயில்

சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் ஆசியுடன் களுத்துறை மாவட்ட தரம் ஐந்து மாணவர்களுக்கான மாபெரும் இலவச இறுதி கருத்தரங்கு இன்று 7ஆம் திகதி காலை 8 மணிக்கு ஹொரண கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. இன்று இக்கருத்தரங்கு மில்லகந்த தமிழ் மகா வித்தியாலத்தில் நடைபெறும்.

ஊடக அனுசரணை

இக்கருத்தரங்கு நாளை 8 ஆம் திகதி காலை 8 மணிக்கு மத்துகம மற்றும் தொடங்கொட வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு மத்துகம கலைமகள் தேசிய பாடசாலையில் நடைபெற உள்ளது. மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. வருகை தரும் அனைத்து மாணவர்களுக்கும் ஒருவேளை சிற்றுண்டியும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவிக்கின்றார்கள்.

## ஜனாதிபதி குறுகிய அரசியல்...

எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்திஜீவிகள் நாட்டிலிருந்து வெளியேறுவது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜெர்மனிய ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலை அடிப்படையாகக் கொண்டு ஒரு தரப்பினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை உருவாக்கி வருகின்றனர்.

அந்த நேர்காணலின் போது, நாட்டின் பிரச்சினைகளை முன்வைத்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரச தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி சிறப்பாக பதிலளித்தார்.

சிங்கள சமூகத்தின் வாக்குகளை மாத்திரம் பெறுவதை நோக்காகக் கொண்டு ஜனாதிபதி செயற்படுகிறார் என்று குறிப்பிடுவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பொருளாதார நெருக்கடி காரணமாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காக வரி வீதம் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து, துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். இதற்கு துரிதமாக தீர்வு காண துறைசார் மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் குறுகியகால திட்டமாகவே வரி விதிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது. வெகுவிரைவில் வரிக் கொள்கை மறுசீரமைக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண வேண்டுமாயின், கசப்பான மருந்தை தற்காலிகமாக அருந்த வேண்டும். நாட்டில் வரி செலுத்தலை ஒரு கலாசாரமாக மாற்றியமைத்தால், அரச வருமானம் சீரானதாக அமையும்" எனத் தெரிவித்தார்.

## பயணிகள் பஸ் மீது...

அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லையெனவும் ஒருவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும், அம்மருத்துவமனை அதிகாரி தெரிவித்தார்.

தெனியாய வழித்தடத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ், கொழும்பிலிருந்து மத்துகம நோக்கிப் பயணித்த போது நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டியில் 6.15 மணியளவில் விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 17 பேர் பயணித்துள்ளதாகவும் பலியான ஐந்து பேரில் இருவரின் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், மருத்துவமனை பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை மோதா பிளாஸ்டிக் நிறுவனத்தில் கடமைக்குச் சென்றுகொண்டிருந்த தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்ற 61 வயது நபரும் இந்த விபத்தில் பலியானதுடன், அவர் இரண்டு பெண் பிள்ளைகள் உட்பட மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் தெரியவந்துள்ளது. இதேவேளை கொள்ளுப்பிட்டி, லிபர்ட்டி சுற்றுவட்டத்துக்கு அருகிலுள்ள டுப்ளிகேஷன் வீதி போக்குவரத்துக்காக தற்காலிகமாக மூடப்பட்டது.

கொள்ளுப்பிட்டியில் பஸ் மீது மரம் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி உததவி வழங்க இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோரின் ஆலோசனைக்கமைய, இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தினகரனுக்கு தெரிவித்தார்.

இந்த சம்பவத்தை அடுத்து பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெனியாவிலிருந்து அதிகாலை 1.30 மணிக்கு பஸ் பஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தை அடைந்து, பின்னர் 5.45 மணிக்கு மத்துகம நோக்கி புறப்பட்ட சுமார் 20 நிமிடங்களில் இந்த விபத்து இடம்பெற்றது.

காப்புறுதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதாக இ.போ.ச. தலைவர் தெரிவித்தார்.

## Digital பொருளாதார...

கிடைக்குமென, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் நம்பிக்கை வெளியிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார். டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கையினால் சர்வதேச போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்துடன் போட்டியிடும் வகையில் இலங்கையை தயார்படுத்த முடியுமென்பதினால், அதனூடாக அடுத்த தசாப்பத்தில் இலங்கையின் வலுவான பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கான இயலுமை கிட்டுமெனவும், அவர் தெரிவித்தார். அதற்காக டிஜிட்டல் பொருளாதாரத் திட்டத்தை சமூகமயப்படுத்தல் மற்றும் அது தொடர்பாக பொதுமக்களை தெளிவூட்டும் செயலமர்வுகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய 'DIGIECON 2030' வேலைத்திட்டம் இம்மாதம் 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தை டிஜிட்டல் மயமாக்குதற்கான டிஜிட்டல் பொருளாதாரத் திட்டமிடலொன்றை இதனூடாக தயாரிக்க எதிர்பார்த்திருப்பதுடன், டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கைத் தயாரிப்புப் பணிகள் பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. டிஜிட்டல் பொருளாதார திட்டத்தினால் சர்வதேசத்தின் போட்டித்தன்மை மிக்க சூழலுக்கேற்ப இலங்கையை தயார்ப்படுத்த முடியும். அதனூடாக இலங்கைக்குள் வலுவான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. டிஜிட்டல் பொருளாதாரத்தினால் மொத்த தேசிய உற்பத்திக்கு 4% பங்களிப்பு கிடைக்கிறது. அதனை 2030 களில் 15 %ஆக அதிகரித்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கமைவாக மாநாடுகளும் செயலமர்வுகளும் நடத்தப்படவுள்ளன" எனத் தெரிவித்தார்.

## த.தே.கூட்டமைப்பு...

உறுப்பினர்களுக்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதினாலேயே, சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கூடிய போது, சபையில் விசேட கூற்றொன்றை முன்வைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இராசமாணிக்கம் சாணக்கியன், மயிலத்தமடு, மாதவனை பகுதியில் பண்ணையாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பாக கருத்துகளை தெரிவித்தார்.

அத்துடன் 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'எமது வளம் எமக்கு வேண்டும்', 'மகாவலி அதிகார சபையே கெடுபிடிகளை நிறுத்து' என்று கோஷங்களை எழுப்பியவாறு சபையின் மத்திக்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய எம்.பி.க்களும் இதில் இணைந்துகொண்டதுடன், கைகளில் 'மயிலத்தமடு மக்களுக்கு நீதி வேண்டும்', 'மகாவலி ஆக்கிரமிப்பை நிறுத்து' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்நிலையில், சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபட்டவர்களை நோக்கி சபையின் தினப் பணிகளுக்கு இடமளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

எனினும், அவர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் சபை முதல்வரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் சபையில் இல்லை. அது தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடலாம் என்றார்.

அவ்வேளையில் சபை முதல்வருடன் சாணக்கியன் எம்.பி. வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதன்போது, ஆளும் கட்சி உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த, சாணக்கியனை நோக்கி கடுமையாக பேசாமல் போய் அமருங்களென்று கூச்சலிட்டார்.

அவரை நோக்கி பதிலளித்த சாணக்கியன், "நாங்கள் எங்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக போராடுகின்றோம்.

தேவையில்லாத விடயத்தில் நீங்கள் தலையிடாது, உங்கள் வேலைகளை பாருங்கள்" என்றார்.

இதன்போதே சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் இதன்போது சபையில் இருந்தார்.

அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பி.யான வீ.இராதகிருஷ்ணனும் ஆர்ப்பாட்டத்துக்கு சென்று சிறிதுநேரம் நின்றுவிட்டு பின் தனது ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

மேற்படி ஆர்ப்பாட்டம் தொடர்ந்த நிலையில், சபையின் தினப் பணிகளுக்கு இடையூறு விளைவிக்காமல் ஆசனங்களில் சென்று அமருமாறு சபைக்கு தலைமை தாங்கிய குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் தொடர்ந்தும் வலியுறுத்தினார்.

அதனையடுத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொண்டு தமது ஆசனங்களில் சென்று அமர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலவச மண்ணெண்ணெய்...

ஈடுபடும் 29,057 OFRP மற்றும் MTRB மீன்பிடிப் படகுகளுக்கு இவ்வாறு இரண்டாம் கட்டமாக மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களுக்கு முதல் கட்டமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நடவடிக்கையானது பாணந்துறை கடற்றொழில் துறைமுகத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ ஷெங்ஹொங் (Qi Shenhong) ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைக்கு சீனக் குடியரசினால் உதவி அடிப்படையில் 4.5 மில்லியன் லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டதுடன், அதன் சந்தைப் பெறுமதி 1,080 மில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக படகொன்றுக்கு 78 லீற்றர் படி மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதுடன், மீன்பிடிப் படகொன்றுக்காக 37,026 ரூபா பெறுமதியான மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களிலுள்ள 97 எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதுடன், இதற்காக அரசாங்கம் 60 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

## நாட்டை விட்டு புத்திஜீவிகள்...

வெளியேற்றத்தை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவது தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"கடந்த அரசாங்கம் மேற்கொண்ட தவறான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததென்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரப் பாதிப்பின் காரணமாகவே பெரும்பாலான புத்திசாலிகள் அப்போது நாட்டை விட்டு வெளியேறினர்.

பொருளாதாரத் துறையில் அமுல்படுத்தப்பட்ட தவறான தீர்மானங்கள் தற்போது திருத்திக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில், பொருளாதாரப் பாதிப்பின் காரணமாகவே இப்போதும் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனரென்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தொழில்த்துறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதை தடுக்க அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படித்த இளைஞர், யுவதிகள் தொழில் பயிற்சிகளை பெற்றுக்கொண்டு நாட்டை விட்டு தொழில் வாய்ப்புகளுக்காக வெளியேறுகின்றனர்.

இதனை பாதகமான அம்சமென்று கருத முடியாது. தேசிய தொழில்த்துறையை பாதுகாக்க அமைச்சுசார் மட்டத்தில் பல புதிய கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

வரிக் கொள்கையை திருத்தியமைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பணவீக்கம் மற்றும் உணவல்லாத பணவீக்கம் சடுதியாக குறைவடைந்துள்ளது. இந்த ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் வங்கி வட்டி வீதங்கள் குறைக்கப்படும். அந்த வகையில், பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாடு நன்கு மீட்சியடைந்து வருகின்றது" எனத் தெரிவித்தார்.

## உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ...

போக்குவரத்து அமைச்சுக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் உரிய பணிப்புயை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பதில் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோரின் ஆலோசனைக்கமைய இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தினகரனுக்கு தெரிவித்தார்.

## அபாய நிலையிலுள்ள வீதியோர...

ஆய்வு செய்து பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள மரங்களை அகற்றுமாறும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். கொள்ளுப்பிட்டியில் நேற்று (06) காலை வீதியால் பயணித்த பஸ் வண்டியொன்றின் மீது மரமொன்று முறிந்து விழுந்ததை தொடர்ந்து, உடனடியாக தடுப்பு நடவடிக்கைகளை இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டார்.

## அரசாங்கம் உண்மைத்...

அடக்குவதற்காக சட்ட ரீதியாக எடுக்கக்கூடிய உச்சபட்ச நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஏழு இடங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பாக தேசிய பத்திரிகையொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான உண்மைத் தன்மையை பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் வெளியிட வேண்டும்.

இந்தப் பயங்கரவாத நடவடிக்கைகள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளால் திட்டமிடப்பட்டிருப்பதாகவே பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பாரதூரமான விடயமென்பதால், இதன் உண்மைத் தன்மை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும்.

30 வருட பயங்கரவாத யுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்ட நாடு எமது நாடு.

குறிப்பாக, கடந்தகால சம்பவங்களால் பாடம் கற்றுக்கொண்டுள்ள நாம், இந்த அச்சுறுத்தல் தொடர்பாக பயங்கரவாத விசாரணை பிரிவு முறையான வேலைத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## ரூ. 07 இலட்சம் பெறுமதியான...

பெண்ணை கடத்திச் சென்று அவரது தங்க நகைகளைக் கொள்ளையிட்ட மூவர் தொடர்பாக இதுவரையில் எதுவித தகவலும் கிடைக்கவில்லையென்பதுடன், தொடர்ந்து விசாரணையை முன்னெடுத்து வருவதாகவும், அப்பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## சஜித்திடம் ஆட்சியை...

"பொருளாதார நெருக்கடி காரணமாகவே புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்றனரென்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய வெளியேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டது அல்லவென்பதை எதிர்க்கட்சியினர் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து, புத்திஜீவிகள் வெளியேற்றத்தை தமது அரசியல் நோக்கத்துக்கான பிரசாரங்களுக்காக எதிர்க்கட்சியினர் பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாத காரணத்தினால், புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனரென்று எதிரணியினர் குறிப்பிடுகின்றனர்.

நாட்டில் பயங்கரவாத செயற்பாடுகளை தோற்றுவித்தவர்களே, ஸ்திரமற்ற அரசியல் காரணமாக புத்திஜீவிகள் வெளியேறுவதாக கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு ஓரிரு இரவில் தீர்வு காண முடியாதென்பதுடன், அதுவொன்றும் கொத்து ரொட்டி விவகாரம் அல்ல.

வரியை அதிகரித்தாலும் விமர்சிக்கின்றனர். குறைத்தாலும் விமர்சிக்கின்றனர்.

வரி வருமானத்தை அதிகரிக்காமல் ஒருபோதும் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாதென்பதை எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் அறியாமல் உள்ளார்" எனத் தெரிவித்தார்.

## மும்பையில் 07 மாடி...

விபத்து ஏற்பட்டது.

கட்டடத்தின் தரைத் தளத்திலிருந்த கடைகளில் பரவிய தீ அடுத்தடுத்த மாடிகளுக்கு பரவியதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கட்டடத்திலும் வாகனத் தரிப்பிட வசதியுள்ள பகுதிகளிலும் தீ பரவியதினால் செய்வதறியாது திகைத்துநின்ற மக்கள், அலறி அடித்துக்கொண்டு கட்டடத்திலிருந்து வெளியேறினர்.

8 தீயணைப்பு வாகனங்கள், 5 ஜம்போ டாங்கர்கள் உள்ளிட்டவற்றின் உதவியுடன் காலை 6.00 மணியளவில் தீ அணைக்கப்பட்டது.

தீயினால் பாதிக்கப்பட்டவர்கள், மும்பை ஹெச்பிடி மருத்துவமனை மற்றும் கூப்பர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன், இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகள் அதிகரிக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதிகாலையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் மும்பையில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## உயர் நீதிமன்றத்தில்...

சபாநாயகரின் சார்பாக அவர் அந்த அறிவிப்பை சபையில் விடுத்தார்.

'நிகழ்நிலை காப்பு' சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மேலும் இரண்டு மனுக்கள் கடந்த 4ஆம் திகதி சபாநாயகரின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட இரண்டு மனுக்களுக்கு மேலதிகமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 121 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'நிகழ்நிலைக் காப்பு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் இரண்டு மனுக்களின் பிரதிகள் சபாநாயகருக்கு கிடைத்திருப்பதாகவும், குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் அறிவித்தார்.

## வடமேல் மாகாண பாடசாலைகளுக்கு...

யானைகளின் அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களில் அமைந்துள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் தினமும் 61 பாடசாலைகளினுள் யானைகள் நுழைந்து சேதம் ஏற்படுத்துவதாகவும் புத்தளம் மாவட்டத்திலுள்ள 32 பாடசாலைகளில் 23 பாடசாலைகளின் பதிவு அறிக்கைகளுக்கமைய, யானைகள் பாடசாலைகளினுள் நுழைந்து சேதம் ஏற்படுத்துவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை வளங்கள் சேதமடைந்துள்ள போதும், பாடசாலை மாணவர்களுக்கு எவ்வித உயிர் ஆபத்தும் ஏற்படவில்லை.

யானைகளின் அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்களத்தினால் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அநுராதபுரம் கும்பிச்சங்குளத்தில்...

நீர்வேளாண்மை திணைக்களத்தினால் ஒரு வருடத்துக்கு முன்னர் பல வகையிலான இனங்களைக் கொண்ட மீன் குஞ்சுகள் இந்தக் குளத்தில் விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## ஆரோக்கியமற்ற சமுதாயத்தை உருவாக்கி கல்வியால் முன்னேற்றத்தை அடைய முடியாது

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ்

(பாலமுனை விசேட நிருபர்)

ஆரோக்கியத்தை அடகு வைத்துவிட்டு நாம் கற்கின்ற கல்வியும், சம்பாதிக்கின்ற பணமும், பொருளாதாரமும் எந்த பயனையும் பெற்றுத்தராது என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

மாணவர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு தெளிவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மனிதனின் ஆரோக்கியத்துக்கு போசாக்கு உணவு மிகவும் அவசியமானதொன்றாகும். குறிப்பாக பாடசாலை சிற்றூண்டிச் சாலைகளில் போசாக்கற்றதும் தரமற்றதுமான உணவுகளே விற்கப்படுகின்றன. இதனை மாணவர்கள் உட்கொண்டு எந்தப் பிரயோசனமும் கிடையாது. மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுக்கு சுகாதாரமானதும் போசாக்குமிக்கதுமான உணவுகளே அவசியமாகும்.

பாடசாலை மாணவர்களின் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாடு தொடர்பில் சகல தரப்பினரும் அவதானம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இல்லையெனில் ஆரோக்கியமற்றதொரு சமூகத்தை உருவாக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆரோக்கியமற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு அவர்களுக்கு கல்வி போதித்து எந்தவொரு முன்னேற்றத்தையும் அடைய முடியாது என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுற்றுச் சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்புப் பிரிவினால் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், சுற்றுச் சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்புப் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஸாத், பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு- சுவிஸ் தூதரக அதிகாரிகளிடையே சந்திப்பு



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

கபே தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் சுவிஸ் தூதரக அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் கொழும்பிலுள்ள சுவிஸ் நாட்டுக்கான இலங்கை தூதரகத்தில் நேற்றுமுன்தினம் (05) நடைபெற்றது.

குறித்த சந்திப்பின் போது தற்காலிக அரசியல் நிலவரம் மற்றும் எதிர்வரும் தேர்தல்களின் போது கபே அமைப்பின் கண்காணிப்பு திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதில் கபே அமைப்பு சார்பாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் மற்றும் நிர்வாக பணிப்பாளர் சுரங்கீ ஆரியவன்ஷ ஆகியோரும். சுவிஸ் தூதரகம் சார்பாக அதன் முதல் செயலாளர் ஜஸ்டின் பொலெட் மற்றும் அதன் அதிகாரிகளான கணிஷ்க ரத்ணப்பிரிய மற்றும் மெலீணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## கவிதை நூல் வெளியீட்டு விழா

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அபிவிருத்தி உத்தியோகத்தரும், ஊடகவியலாளரும், கவிஞருமான முழுமதி எம். முர்தளா எழுதிய 'மழையாகிறேன் வெயிலாகிறேன்' கவிதைநூல் வெளியீட்டு விழா நாளை 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் மீரா எஸ்.இஸ்ஸடீன் தலைமையில் நடைபெறவுள்ள நூல் வெளியீட்டு விழாவில் அரசியல் பிரமுகர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## கல்முனை பற்றிமாவில் களைகட்டிய மீலாத் விழா



(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் தேசிய மீலாத் விழா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்எச் எம் ஜாபீர் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை வலய பிரதி கல்வி பணிப்பாளர்களான திருமதி வரணியா, திருமதி றியாசா உதவி கல்வி பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் எஸ்.ஹதிசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். கல்லூரியின் மீலாத் விழா குழுத் தலைவர் ஏ.ஆதம்பாவா வரவேற்புரை நிகழ்த்த பிரதம பேச்சாளர் மௌலவி பஸில் எம் பதுறுதீன் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மீலாத் விழா போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## யானை தாக்குதலினால் உயிரிழந்த பெண்ணின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைப்பு



(பாறுக் ஷிஹான்)

யானை தாக்குதலினால் உயிரிழந்த பெண்ணின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெய்னாகாடு வம்பியடி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (03) இரவு காட்டு யானை தாக்குதலில் கல்முனையிலிருந்து நிந்தவூர் அல்லிமூலை வழியாக இறக்காமம் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் இரவு வேளை பயணித்த பெண் ஒருவர் யானை தாக்குதலினால் உயிரிழந்திருந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இறக்காமம் 9 ஆம் பிரிவைச் சேர்ந்த 43 வயதுடைய புஹாரி சரீப் விபானி என்ற மூன்று பிள்ளைகளின் தாய் என தெரியவருகின்றது.

தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்லவிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## பவுசர்–சீமெந்து லொறி மோதி விபத்து இருவர் படுகாயம்

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை ஹொரவ் பொத்தான பிரதான வீதி பம்மதவாச்சி பகுதியில் நேற்று (06) நடைபெற்ற விபத்தில் இரு சாரதிகள் காயமடைந்துள்ளனர்.

ஹொரவ்பொத்தானை பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த பவுசரும், திருகோணமலையிலிருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சீமெந்து லொறியும் மோதியமையால் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் இரண்டு சாரதிகளும் காயங்களுக்கு உள்ளானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கம் காரணமாக லொறி வீதியின் குறுக்கே சென்றதால் முன்னால் வந்துக் கொண்டிருந்த பவுசர் விபத்துக்குள்ளானதாகவும் தெரிய வருகிறது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருகோணமலையில் சிறுவர் தின நிகழ்வு





(அன்புவழிபுரம் தினகரன் நிருபா்)

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் கரித்தாஸ் மிசெரியோவின் நிதியுதவியுடன் திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுவர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தீபம் நிலையத்தில் பணிப்பாளர் அருட்பணி.கலாநிதி.B.போல் றொபின்சனின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் கிராம மட்டத்திலான சிறுவர் குழுக்கள், இளைஞர் குழுக்கள் மற்றும் சுற்றுச் சூழல் குழுக்களும் இணைந்து சிறுவர் தின நிகழ்வை சிறப்பித்தனர். அத்துடன் இந்நிகழ்வில் எகெட் கரித்தாஸ் நிறுவன உத்தியோகத்தர்களும் சமூக குழுத்தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் 350ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாகாண மட்ட தமிழ் மொழித்தின போட்டி

## ஒலுவில் அல்–ஹம்றா மகா வித்தியாலயம் வெற்றி

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

மாகாண மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில் திருகோணமலை தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தனிநடிப்பு பிரிவு நான்குக்கான போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலய மாணவன் எம்.எஸ்.சபியுல் அஸ்மான் இரண்டாமிடத்தை பெற்றுக்கொண்டார்.

பிரிவு 05 அறிவிப்பாளர் போட்டி திருகோணமலை தி/புனித மரியாள் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் பாடசாலை மாணவி எஸ்.றிஸ்மத் றிழா மூன்றாமிடத்தை பெற்றார். மேலும் 4 ஆம் பிரிவு கட்டுரைப் போட்டியில் பாடசாலை மாணவி எம்.கே.ஹம்ஸத் ஹமாஸா இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டார்.

## கொள்ளையில் ஈடுபட்ட இருவர் கைது

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் சூட்சுமமான முறையில் கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி அவர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட சில பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு உள்ளிட்ட பல பொலிஸ் பிரிவுகளில் அண்மைக்காலமாக கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் பகுதிநேர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவிகள், சந்தைக்குச் செல்லும் மக்கள் என பொது வெளியில் நடமாடுபவர்களிடம் மிகவும் சூட்சுமமான முறையில் ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் இருவர் களுவாஞ்சிகுடி பொலிஸாரால் கைது செய்துசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 22,23 வயதுகளையுடைய அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையடித்த தங்க நகைகளை அக்கறைப்பற்று பிரதேசத்திலுள்ள தங்க நகை விற்பனை நிலையமொன்றில் விற்பனை செய்திருந்ததோடு அவை உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கொள்ளைச் சம்பவத்துக்கு பயன்படுத்தியதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



மலைச்சாரல்

## சப்ரகமுவ மாகாணத்தில்

# தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் உயர்தர விஞ்ஞான மற்றும் கணித பாடங்களை போதிப்பதற்கு ஆசிரியர்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து நியமனம் செய்து கொள்வதற்கு கல்வி அமைச்சிடம் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நீண்ட காலமாக கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் சிறப்பாக சித்தியடையும் மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலம் உயர்தர வகுப்பு பாடங்களான விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களை கற்பிப்பதற்கு தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் இன்மை பெரும் பிரச்சினையாகவுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக் காட்டி வருகின்றனர்.

சப்ரகமுவ மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாக அண்மையில் இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டது.

சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளில் சேவையாற்றி வந்த விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சென்றுள்ளதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பாடசாலைகளை ஆயிரம் வரை உயர்த்தும் மத்திய அரசின் வேலைத்திட்டத்தின் கீழ் இறக்குவான சாந்த ஜோசப் தமிழ் வித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் அப்பாடசாலையில் தமிழ்மொழி மூலம் உயர்தர வகுப்புக்கு விஞ்ஞானம் மற்றும் கணிதம் வகுப்புகள் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மாகாணத்தில் தமிழ் மொழி விஞ்ஞான, கணித ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு வெளி மாகாணங்களிலிருந்து நியமனம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

## இறக்குவானை - காலி வீதியில் மண்சரிவு அச்சுறுத்தல்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தின் சூரியகந்த தெனியாய வீதியில் மண்சரிவு அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இப்பிரதேச செயலகப் பிரிவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரிக் கிளை காரியாலயம் அறிவித்துள்ளது.

எனவே இப்பகுதியில் மண்சரிவு அபாய எச்சரிக்கை பிரதேசங்களில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசங்கள் தொடர்பில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்கனவே ஆய்வுகள் நடத்தப்பட்டு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் இப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் சிலர் அதை பொருட்படுத்தாமல் இவ்விடங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே உயிர் உடைமை சேதங்களைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் இவ்விடங்களில் வசிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## மலையக வீதிகளில் பயணிப்பது அவதானம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

காலநிலை மாற்றம் காரணமாக பலாங்கொடை ஹப்புத்தள பலாங்கொடை பொகவந்தலாவ வீதிகளில் பனி படர்ந்துள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே மேற்படி வீதிகளில் பயணிக்கும் பயணிகள் அவதானமாக செல்ல வேண்டும் எனவும் விசேடமாக வாகனங்கள் தமது ஹெட்லைட்டுகளை ஒளிர விட்டுச் செல்லுமாறும் வாகன சாரதிகளுக்கு போக்குவரத்துப் பொலிஸார் அறிவுறுத்துகின்றனர்.

பலாங்கொடை ஹப்புத்தள மற்றும் பலாங்கொடை பொகவந்தலாவ வீதிகள் அதிகம் வழுக்கல் தன்மையுடன் இருப்பதுடன் வீதிகளின் இரு பக்கங்களிலும் பள்ளத்தாக்குகளும் காணப்படுவதால் இவ்வீதிகளில் வாகன சாரதிகள் இரட்டிப்பு அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறும் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

## நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரிப்பு



நீர் மின் உற்பத்திக்கான நீர்த்தேக்கங்களில் நீரின் மட்டம் அதிகரித்து வரும் நிலையில், மவுசாகல, காசல் ரீ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது.

குறிப்பாக மவுசாகல நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது இன்னும் ஒரு சில அடிகள் நிறைய உள்ளது.

இந்நிலையில் கென்யோன், லக்சபான, நவலக்சபான, விமலசுரேந்திர, கலுகல, பொல்பிட்டிய ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

தொடர்ந்து மத்திய மலைநாட்டில் மழை பெய்யும் பட்சத்தில் சகல நீர்த் தேக்கங்களும் நீர் நிரம்பிய நிலையில் வான் கதவுகள் எந்த நேரத்திலும் திறந்து விட வாய்ப்பு உள்ளது.

ஆகையால் தாழ் நிலப்பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் கரையோர பகுதியில் உள்ள மக்கள் சற்று பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு கூறினார்.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் சற்று அதிகரித்துள்ளதாகவும் அதனால் நீர்மின் உற்பத்தியின் வீதத்தை அதிகரிக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தினமும் இடம்பெறும் மழை வீழ்ச்சியின் அளவை மதிப்பிட்டு அதற்கிணங்க அந்த வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப் படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எதிர்பார்த்த அளவில் மழை வீழ்ச்சி அப்பகுதியில் இதுவரை இடம்பெறவில்லை. அந்த வகையில் கடந்த வாரத்தில் நூற்றுக்கு 14 வீதமாக இருந்த நீர் மின் உற்பத்தி தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி கிடைக்காத நிலையில், மீண்டும் நீர்மின் உற்பத்தியின் அளவை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கனரக வாகனம் குடைசாய்ந்து விபத்து

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா பதுளை பிரதான வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை (06) நுவரெலியாவிலிருந்து பதுளை நோக்கி பயணித்த லொறியொன்று ஹக்கல பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது லொறியின் சாரதி மற்றும் அவரின் உதவியாளர் இருந்ததாகவும் சாரதி மாத்திரம் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான லொறி பிரதான வீதியை விட்டு விலகி வேகக்கட்டுப்பாட்டை இழந்து சுமார் 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதாக மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வடக்கின் உதயம்



தமிழ் மொழிபெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதியை யாழ்ப்பாண நூலகத்தின் பிரதம நூலகர் அனுஷியா சிவகரனுக்கு கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால் வழங்கி வைத்துள்ளார். யாழ். நூலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது நூலக உதவியாளர் கோதை நந்தகுமாரும் பங்குபற்றினார். முக்கியஸ்தர்களான தமிழர் பிரதிநிதிகளுக்கு தமிழ் மொழிபெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் சமிந்த வாஸ் கிரிக்கெட் பயிற்சி

(யாழ். விசேட நிருபர்)

JAFFNA STALLIONS CRICKET ACADEMY ஏற்பாட்டில் JAFFNA STALLIONS தலைமை பயிற்றுவிப்பாளர், இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் தலைமையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

அதில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர். குறித்த பயிற்சி முகாம் நேற்றையதினம் சனிக்கிழமையும், யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன், நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

வடக்கில் மூன்று தினங்களும் நடைபெறவுள்ள இந்த பயிற்சி முகாமிலிருந்து 150 வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு,



அவர்களை மேலும் வலுப்படுத்தும் பயிற்சிகளை JAFFNA STALLIONS CRICKET ACADEMY முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரு குழுக்களுக்கிடையே மோதல்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி கல்மடுநகர் இராமநாதபுரம் பகுதியில் வீடொன்றின் மீது நேற்றுமுந்தினம் இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வீட்டுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 30 ஏக்கர் சந்திப்பதில் உள்ள வீடொன்றின் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்தே குறித்த வீட்டின் மீது தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் அறிய முடிகின்றது. இதேவேளை கிளிநொச்சி அக்கரான் குளம் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் எரியூட்டப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## உலக குடியிருப்பு தினம் மன்னாரில் முன்னெடுப்பு



(மன்னார் குறூப் நிருபர்)

உலக குடியிருப்பு வாரம் கடந்த 02 ஆம் திகதி தொடக்கம் 09 ஆம் திகதி வரை தேசிய ரீதியில் 'நெகிழ்வான நகர்ப்புற பொருளாதாரம்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பங்களிப்புடன் பல்வேறு செயற்பாடுகளை அமுல்படுத்தி இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடந்த 02 ஆம் திகதி திங்கட்கிழமை காலை தேசிய கொடி ஏற்றி உலக குடியிருப்பு வார நிகழ்வுகளை ஆரம்பித்துள்ளனர். மேலும் மன்னார் ஜிம் பிறவுண் இந்தியன் வீட்டுத்திட்டம் மற்றும் பற்றிமா நகர் 1 மற்றும் பற்றிமா நகர் 11 இந்தியன் வீட்டுத்திட்டங்களில் சிரமதானம், மரநடுகை மற்றும் போதைவஸ்து விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபெற்றது.

மேலும் தங்களது பிள்ளைகளுக்காக வீடமைத்த பெற்றோர் இன்று வயோதிப இல்லங்களில் வசித்து வருகின்றனர்.

மன்னார் பட்டித்தோட்டம் வயோதிப இல்லத்தில் வாழும் மூத்தோரை சந்தித்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கும் நிகழ்வும் இவ்வாரத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

தொடர்ந்து வரும் நாட்களில் கடந்த 2021 மற்றும் 2022 இல் ஆரம்பிக்கப்பட்ட 'ஒபட்ட கியக் ரட்டட்ட ஹெட்டக்' மானிய வீடமைப்பு வேலைத் திட்டத்திற்கான மிகுதி கொடுப்பனவுகள் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வதேச முதியோர் தின நிகழ்வு

(பரந்தன் குறூப் நிருபர்)

சர்வதேச முதியோர் மற்றும் சர்வதேச சிறுவர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக கிளிநொச்சி மாவட்ட நிகழ்வு நேற்று (06102023) காலை 09.30மணியளவில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன்விருத்தி நிலையத்தில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அகல்ஜா செகராஜா கலந்து கொண்டிருந்தார்.

தொடர்ந்து, கிளிநொச்சி விசேட



தேவைக்குட்பட்டோர் வலையமைப்பு மாணவியின் ம. ஜீவராணியின் வரவேற்பு நடனம் நடைபெற்றதைத் தொடர்ந்து வரவேற்புரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி மகாவித்தியாலய மாணவி ம.முகிழினியின் கவிதை, கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களின் நடனம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவு முதியோர்களின் வில்லிசை, பூநகரி பிரதேச செயலக பிரிவு முதியோர்களின் கூத்து என முதியவர்கள் சிறுவர்களின் பல்வேறு திறமைகளை வெளிக்காட்டும் வகையிலான கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. மேலும் பரிசில் வழங்கல், கௌரவிப்பு நிகழ்வுகளுடன் அதிதிகளின் உரைகளும் சிறப்புற நடைபெற்றன. இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் க.ஜெயானந்தராசா, நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் உத்தியோகத்தர், கிளிநொச்சி விசேட தேவைக்குட்பட்டோர் வலையமைப்பின் இயக்குநர் டானியல், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், முதியோர்கள், சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பெண்களால் இயக்கப்படும் லங்கா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

ஒரு வரலாற்று சாதனைமிக்க நிகழ்வாக, இலங்கையில் முதன் முறையாக, மத்திய கண்காணிப்புடனான, முழுமையாக தன்னியக்கமயமாக்கப்பட்ட, பெண்களால் இயக்கப்படும் லங்கா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையம் சமீபத்தில் வெகு விமரிசையாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது வலுவூட்டல், உள்ளடக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றைக் குறிக்கிறது. கொழும்பின் மையப் பகுதியில், வைத்தியசாலை சதுக்கத்தில் அமைந்துள்ள இது, கடந்த இரண்டு தசாப்தங்களில் நகர எல்லைக்குள் திறக்கப்பட்ட முதலாவது புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் என்பதுடன், அதன் வாடிக்கையாளர்களுக்கு தினசரி 24 மணிநேரமும் சேவைகளை வழங்கும். வைத்தியசாலைக்கு அருகாமையில் இருப்பதால், வைத்தியர்கள், நோயாளர்கள் மற்றும் வருகை தருகின்ற அனைவரும் அத்தியாவசிய சேவைகளை எளிதாக பெற்றுக்கொள்வதை உறுதி செய்கிறது.

ஒரு எரிபொருள் நிலையம் என்பதற்கும் அப்பால், இந்த முயற்சியானது பெண்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் தொழில்முறை பணிநிலைகளை பன்மைத்துவப்படுத்துவது ஆகியவற்றைப் பொறுத்தவரையில் ஒரு முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்த தூரநோக்குடனான திட்டத்தின் பின்னணியில் இது இலங்கையின் மிகப்பெரிய விசேட வைத்தியசாலையாகவும், மகளிர் மற்றும் சிறுவர்களின் ஆரோக்கியத்தில் ஒரு அசைக்கமுடியாத அக்கறையாளராகவும் அறியப்படுகின்ற நைன்வெல்ஸ் ஹொஸ்பிட்டல்ஸ் உள்ளது. நைன்வெல்ஸ் ஹொஸ்பிட்டல்ஸ் ஐநா சர்வதேச உடன்படிக்கையின் பெண்கள் சமத்துவ திட்டத்தில் ஒரு பங்கேற்பாளராகவும் உள்ளதுடன், இது உலகளாவிய அளவில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

லங்கா ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையம், அதிநவீன தொழில்நுட்பத்தை தழுவி, எரிபொருள் நிரப்பும் அனுபவத்திற்கு மீள்வரைவிலக்கணம் வகுத்துள்ளது. அதன் மையத்தில் புரட்சிகரமான NPND கட்டமைப்பு உள்ளது, இது 'அச்சு இல்லை, வழங்கல் இல்லை" ( No Print, No Delivery) என்பதன் சுருக்கமாகும்.

இது செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்தும் தன்னியக்கமயமாக்கத்தின் அற்புதமான ஆற்றலுடன், பரிவர்த்தனைகளை நெறிப்படுத்துகிறது. முந்தைய பரிவர்த்தனைக்கான ரசீது வெற்றிகரமாக வழங்கப்பட்டால் மட்டுமே அடுத்த வாடிக்கையாளருக்கு எரிபொருள் வழங்கப்படுவதை இந்த கட்டமைப்பு உறுதி செய்கிறது.




## புரட்சிகர eSIM தீர்வுடன் கையடக்க தொலைபேசி சேவையை மீள்வரையறை செய்யும் HUTCH




இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான HUTCH நிறுவனம், iPhone, Samsung உள்ளிட்ட பல்வேறு ஸ்மார்ட்போன் வர்த்தகநாமங்களை கொண்டுள்ள அனைத்து பாவனையாளர்களுக்கும் அதன் புரட்சிகரமான eSIM ஐ அறிமுகப்படுத்துவதன் மூலம், கையடக்கத் தொலைபேசி இணைப்பை மீள் வரையறை செய்கிறது. உட்பொதிக்கப்பட்ட SIM என அறியப்படும் eSIM ஆனது, உரிய வசதியை கொண்ட கையடக்கத்தொலைபேசி சாதனங்களுக்குள் தடையின்றி இணைக்கப்படும் ஒரு அம்சமாகும். இது பௌதீக சிம் அட்டைகளுக்கான அவசியத்தைத் தவிர்க்கிறது. அத்துடன் eSIM கொண்டுள்ள பல்வேறு நெகிழ்வுத்தன்மை மூலம், பாவனையாளர்கள் தங்கள் மொபைல் சாதனங்களில் உள்ள முதன்மையான இலக்கத்துடன் செயற்படக்கூடிய இரண்டாவது இலக்கத்தை பயன்படுத்த முடியும்.

## கோல்டன் நைட் நிகழ்வில் ஜனசக்தி லைஃப் சாதனையாளர்கள் கௌரவிப்பு



இலங்கையின் முன்னோடி ஆயுட் காப்புறுதி வழங்குனரான ஜனசக்தி லைஃப் (Janashakthi Life), அண்மையில் கொழும்பின் பிரபல அடையாளமாக விளங்கும் தாமரைக் கோபுரத்தில் 'Janashakthi Life Achievers Golden Night' நிகழ்வை நடாத்தியிருந்தது. இந்நிகழ்வில் இவ்வருடத்தின் முதல் பாகத்தில் சிறந்து விளங்கிய 300 உயர் சாதனையாளர்களின் சாதனைகள்கொண்டாடப்பட்டன.

ஜனசக்தி லைஃப் நிறுவனத்தின் பிரதித் தலைவர் பிரகாஷ் ஷாஃப்டர், குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும்/ பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரமேஷ் ஷாஃப்டர் உள்ளிட்ட மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் ஜனசக்தி லைஃப் நிறுவனப்பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி லியனகே உள்ளிட்டநிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ உறுப்பினர்களும் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில், சிறந்த அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளை வழங்கிய சிறந்த சாதனையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்பட்டன.

இதன் மூலம் இந்த மாலைப் பொழுது சாதனைகளாலும் தோழமை உணர்வுகளாலும் ஊக்கப்படுத்தப்பட்ட அதேவேளை , Personal Lines Channel பொது முகாமையாளர் ரெஹான் குணவர்தன மற்றும் Retail Business Channel பொதுமுகாமையாளர் H.E.T. சம்பத் ஆகியோரின், அனைவரையும் கவரும் வகையிலான விளக்கக்காட்சிகளும் இதன்போது இடம்பெற்றன.

அவர்கள் ஜனசக்தி லைஃப்பின் மூலோபாய தூரநோக்கு மற்றும் எதிர்கால வாய்ப்புக்களை இங்கு சுட்டிக் காட்டினர்.

## இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய வங்கியாக 19ஆவது தடவையாகத் தெரிவானது கொமர்ஷல் வங்கி



இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய வங்கியாக கொமர்ஷல் வங்கி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு 2023ல் ஒட்டுமொத்த கூட்டாண்மை நிறுவனங்களில் இலங்கையில் மிகவும் மதிப்புக்குரிய நான்காவது நிறுவனம் என்ற இடத்தையும் அது பிடித்துள்ளது. LMD சஞ்சிகையினாலேயே இந்த நிலைப்பாடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி சகல பிரிவுகளின் கீழ் நிதிச் செயற்பாடு வர்த்தகத் துறை மற்றும் நேர்மை என்ற பிரிவில்; இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக தூர நோக்கு, முகாமைத்துவ சுயவிவரம், தேசிய முன்னோக்கு மற்றும் கூட்டாண்மை கலாசாரம் என்பனவற்றில் இலங்கையின் முன்னணி ஐந்து கூட்டாண்மை நிறுவனங்களில் ஒன்றாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகவும் மதிப்புக்குரிய வங்கி என்ற விருதை கொமர்ஷல் வங்கி பெற்றுள்ளது இது 19ஆவது தடவையாகும். அத்தோடு 2005ல் LMD இன் இந்த தரப்படுத்தல் முறை ஆரம்பிக்கப்பட்டது முதல் அதன் வருடாந்த மதிப்பீட்டில் கொமர்ஷல் வங்கி ஒவ்வொரு வருடமும் மிகவும் மதிப்புக்குரிய ஐந்து நிறுவனங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளது. 2023ல் கொமர்ஷல் வங்கி இந்த வரிசையில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

வங்கிக்கு கிடைத்துள்ள இந்த கீர்த்திகள் பற்றி கருத்து வெளியிட்ட வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க "கூட்டாண்மை வெற்றிக்கு மதிப்பு என்பது ஒரு மத்திய ஒரு விடயமாகும். நிதி சேவைத் துறையில் நேர்மைக்கான கீர்த்தி நாமமும் திடமான நிதிச் செயற்பாடும் தவிர்க்க முடியாத அம்சங்களாகும்.

இந்தப் பிரிவுகளின் தரப்படுத்தலில்; பொது மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் அதி உயர் நிலையை அடைந்து கொள்வதும் தொடர்ந்து 19ஆவது தடவையாக மிகச் சிறந்த மதிப்புக்குரிய வங்கி என்ற நிலையை அடைவதும் உண்மையிலேயே குறிப்பிடத்தக்க சாதனையாகும்" என்றார்.

## இலங்கையின் எதிர்கால மேம்பாட்டுக்காக எரிபொருள் வழங்க உறுதியளித்த சினோபெக்

### விநியோகஸ்தர்கள் பாராட்டும் நிகழ்வில் நிறுவனம் தெரிவிப்பு




சினோபெக் இலங்கையின் ஆற்றல்மிக்க எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் தனது அதிகாரப்பூர்வ நுழைவை கொழும்பில் நடைபெற்ற உள்ளூர் விநியோகஸ்தர்களுக்கான பாராட்டு நிகழ்வில் அறிவித்தது.

இந்த முக்கியமான சந்தர்ப்பம் இலங்கையின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தின் ஆரம்பத்தையும் குறித்தது. இந்த நுழைவுடன், சினோபெக் அதன் நன்மைகளை முழுமையாக வழங்குவதற்கும், நாட்டிற்கு நிலையான, நீடித்த மற்றும் உயர்தர எண்ணெய் தயாரிப்புகளை வழங்குவதற்கும், விநியோகஸ்தர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றல் ஸ்திரத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

சினோபெக் மற்றும் இலங்கையின் மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சுக்கு இடையில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ், சினோபெக் இலங்கை முழுவதும் தற்போதுள்ள 150 நிரப்பு நிலையங்களை உரிமையாக்குவதற்கும் மேலும் 50 நிரப்பு நிலையங்களில் முதலீடு செய்வதற்கும் 20 வருட உரிமத்தைப் பெற்றுள்ளது. சினோபெக், இலங்கை மக்களின் சிறந்த வாழ்க்கைக்கு வலுவூட்டுவதற்காக, எண்ணெய் வகைகள் கொள்வனவு, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றின் முழு செயல்முறைக்கும் சேவை செய்யும் திறனை தொடர்ந்து மேம்படுத்தும். உலகின் மிகப்பெரிய எரிபொருள் சுத்திகரிப்பு நிறுவனமாகப் புகழ் பெற்று, வருடாந்த உற்பத்தித் திறனை 250 மில்லியன் தொன்கள் தாண்டிய பெருமையுடன், சினோபெக், அதன் நுகர்வோரின் தேவைக்கேற்ப உயர்மட்ட எரிபொருள் தயாரிப்புகளின் நிலையான விநியோகத்துக்கு உத்தரவாதம் அளிப்பதற்காக, அதன் பரந்த வளங்கள் மற்றும் உலகளாவிய வர்த்தக வலிமையைப் பயன்படுத்த தயாராக உள்ளது.

## குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய சமூக மருத்துவர்கள் கல்லூரியுடன் பேபி செரமி கைகோர்த்தது




குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்களை தடுக்க முடியுமாக இருந்த போதிலும், இலங்கையில் ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கும் ஒரு குழந்தை காயம் காரணமாக மரணிப்பதோடு, தடுக்கக்கூடிய விபத்துக்கள் காரணமாக ஒவ்வொரு வாரமும் 50 குழந்தைகள் வீதமும், மாதத்திற்கு 215 குழந்தைகளும் இவ்வாறு மரணிக்கின்றனர். தொடரான புத்தாக்கமான செயற்பாடுகள் மூலம் சிறுவர்களிடையே ஏற்படும் விபத்துகளை தடுக்கக் கூடிய விதத்தை, இலங்கை சமூக மருத்துவர்கள் கல்லூரி (College of Community Physicians) மற்றும் பேபி செரமி (Baby Cheramy) இணைந்து மேற்கோண்டுள்ளன.

இந்த கூட்டாண்மையானது, அதிகரித்து வரும் விபத்துகளை குறைக்கும் முயற்சியின் அடிப்படையில், குழந்தைகளுக்கு சூழலில் ஒழிந்துள்ள ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இலங்கையின் சமூக மருத்துவர்களின் கல்லூரியானது, சமூக மருத்துவத் துறையில் உள்ள நிபுணத்துவம் வாய்ந்த பிரதான அமைப்பாகும் என்பதோடு, உயர்தர பராமரிப்பு மற்றும் பொதுச் சுகாதார செயற்பாடுகளை ஊக்குவித்தல் மூலம் இலங்கை மக்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக அது பணியாற்றி வருகிறது. அதே சமயம் இலங்கையில் முன்னணி வகிக்கின்ற, அனைவராலும் மிகவும் விரும்பப்படும் குழந்தை பராமரிப்பு வர்த்தக நாமமான பேபி செரமியானது, குழந்தைகளுக்கான பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதை அடிப்படையாகக் கொண்ட 60 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

இலங்கையில், குழந்தைகளின் இறப்புக்கான காரணங்களுக்கான ஐந்து முக்கிய விடயங்களில் காயங்களும் உள்ளடங்குகின்றது. போக்குவரத்து விபத்துகள், நீரில் மூழ்குதல், வீழ்தல், தீக்காயம் ஏற்படுதல், விஷம் போன்றவை இவ்வாறனவற்றில் முக்கிய காரணங்களாகும்.

வெளிப்புற காயங்கள், நாய் கடித்தல், எலும்பு முறிவுகள், என்புகள் விலகுதல் உள்ளிட்ட காயங்களின் தன்மையானது பல்வேறு வகையில் மாறுபடுகின்றன. 2022 ஆம் ஆண்டில் வீதி விபத்துகளால் 2,713 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடுமையான நோயைத் தவிர, காயமடைந்த குழந்தைகள் நீண்ட கால இயலாமை மற்றும் நாட்பட்ட வலியால் பாதிக்கப்படுகின்றனர். இது அவர்களின் வாழ்நாளில் வயதுக்கு ஏற்ற அன்றாட நடவடிக்கைகளைச் செய்யும் திறனில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அத்துடன், இதன் காரணமாக அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக வருடாந்தம் ரூ. 1,100 மில்லியன் அரச நிதி செலவிடப்படுகிறது. குழந்தைகளிடையே ஏற்படும் விபத்துகளில், 1014 வயதுப் பிரிவு சிறுவர்களிடையே ஏற்படும் விபத்துகளின் விகிதம் 47% ஆகவும், அதைத் தொடர்ந்து 59 வயதுடைய சிறுவர்களிடையே ஏற்படும் விபத்துகள் 19% ஆகவும் பதிவாகியுள்ளது.

## அமானா வங்கி உரிமை வழங்கலுக்கு பங்குதாரர்கள் அனுமதி வழங்கினர்




அமானா வங்கியின் எதிர்வரும் உரிமைப் பங்கு வழங்கல் செயற்பாட்டுக்கு, வங்கியின் பங்குதாரர்கள் தமது அனுமதியை வழங்கியுள்ளனர். அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட பொது ஒன்றுகூடலின் போது இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2,902,267,365 சாதாரண வாக்குரிமை பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குக்கும் 1 புதிய பங்கு வீதம், பங்கொன்றுக்கு ரூ. 2.30 எனும் அடிப்படையில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடான ரூ. 20 பில்லியன் இருப்பைக் கொண்டிருப்பதை உறுதி செய்யும் வகையில், இந்த உரிமைப் பங்கு வழங்கலினூடாக ரூ. 6.7 பில்லியனை திரட்டுவதற்கு அமானா வங்கி எதிர்பார்த்துள்ளது.

பங்குதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்படாத ஏதேனும் பங்குகளை, சகல மேலதிக உரிமை பங்கு வழங்கல் விண்ணப்பதாரிகளுக்கும் முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டதன் பின்னர், கோரப்படாத உரிமைப் பங்குகளை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் சட்ட அமைப்புகள் அடங்கலாக இதர நபருக்கு(களுக்கு) ஒதுக்கீடு செய்வதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

உரிமைப் பங்கு வழங்கல் கால எல்லைகளின் அடிப்படையில், XR திகதி செப்டெம்பர் 22ஆக நிர்ணயிக்கப்பட்டதுடன், பதிவு திகதி மற்றும் ஒதுக்கீட்டு திகதி செப்டெம்பர் 26 ஆக தீர்மானிக்கப்பட்டது. ஒதுக்கீடு தொடர்பான கடிதங்களை ஒக்டோபர் 5ஆம் திகதி வெளியிடுவதற்கு வங்கி எதிர்பார்க்கின்றது.

உரிமைப்பங்கு வழங்கல் வியாபாரம் ஒக்டோபர் 11ஆம் திகதி ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுவதுடன், CDS இல் தன்னலமறுப்புக்கான இறுதித் திகதி ஒக்டோபர் 18 ஆகும். உரிமை வழங்கலுக்கான கொடுப்பனவுகளை ஏற்றுக் கொள்வதை ஒக்டோபர் 24ஆம் திகதி வரை வங்கி முன்னெடுக்கும்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்வதுடன், வங்கியின் 29.97% பங்குகளை தன்வசம் கொண்டுள்ளது. IsDB குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது.

வட்டிசாராத வங்கியியல் மாதிரியின் முன்னோடியான செயற்பாட்டாளர் எனும் வகையில், உலகின் சிறந்த 100 உறுதியான இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக அமானா வங்கியை ஏசியன் பாங்கர் இனால் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

# தென்னாபிரிக்காவுக்கு எதிராக இன்று முதல் போட்டியில் இலங்கை களத்தில்



உலகக் கிண்ணத்தை ஆரம்பித்து இலங்கை அணி இன்று (07) தென்னாபிரிக்காவுக்கு எதிராக பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

டெல்லி, அருன் ஜெய்ட்லி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டி பகலிரவு ஆட்டமாக பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை அணி தனது முன்னணி பந்துவீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் இன்றியே உலகக் கிண்ணத்தில் களமிறங்கியுள்ளது. அண்மையில் நடந்த ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் மோசமாக தோற்ற இலங்கை உலகக் கிண்ண பயிற்சிப் போட்டிகளிலும் பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தானிடம் தோல்வியை சந்தித்த நிலையிலேயே இன்று களமிறங்கவுள்ளது.

எனினும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் குசல் மெண்டிஸ் அதிரடி சதத்தை பெற்ற உத்வேகத்துடன் இருப்பதோடு ஆரம்ப வீரர் குசல் ஜனித் பெரேரா மற்றும் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன தமது காயங்களில் இருந்து மீண்டு இன்றைய போட்டியில் களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

மறுபுறம் தென்னாபிரிக்க அணிக்கும் உலகக் கிண்ண பயிற்சிப் போட்டிகள் சாதகமாக அமையவில்லை. ஆப்கானுக்கு எதிரான முதல் பயிற்சிப் போட்டி மழையால் கைவிடப்பட்டதோடு நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது பயிற்சிப் போட்டி தோல்வியை சந்தித்தது.

டெம்பா பவுமா தலைமையிலான தென்னாபிரிக்கா தனது வலுவான அணி ஒன்றுடனேயே இன்றைய போட்டியில் களமிறங்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆரம்ப துடுப்பாட்ட வரிசை குயின்டன் டி கொக் மற்றும் ரஸி வன்டர் டுசனில் பெரிதும் தங்கி இருக்கும் என்பதோடு ககிசோ ரபாடா மற்றும் டப்ரைன் ஷம்சி பந்துவீச்சில் பலம் சேர்க்கின்றனர்.

டெல்லி ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமானதாகும். மந்தமான இந்த ஆடுகளத்தில் இரண்டாவது துடுப்பெடுத்தாடும் அணிக்கு அதிக சாதகமாக அமைய வாய்ப்பு இருக்கிறது.

எனவே போட்டியின் நாணய சுழற்சி முக்கியமானதாக அமையவுள்ளது.

## யெமனுக்கு எதிரான இலங்கையின் 23 பேர் கால்பந்து குழாம் அறிவிப்பு



உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் தொடரில் யெமனுக்கு எதிரான முதல் கட்டப் போட்டிக்காக 23 பேர் கொண்ட இலங்கை கால்பந்து அணியை இலங்கை கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது. இந்த தகுதிகாண் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி சவூதி அரேபியாவில் நடைபெறவுள்ளது.

பிஃபா தடை விதிக்கப்பட்ட நிலையில் இலங்கை கால்பந்து அணி சுமார் ஓர் ஆண்டுக்குப் பின்னரே கால்பந்து போட்டியில் களமிறங்கவுள்ளது. பிஃபா தடை தற்போது நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இலங்கை அணி தலைமை பயிற்சியாளர் அன்டி மொரிசனின் கீழ் பயிற்சிக்காக ஒன்றிணைந்துள்ளது.

இலங்கை கால்பந்து அணி அறிவிக்கப்பட்டபோதும் அணித் தலைவர் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. தலைவர் விரைவில் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி வெல்லும் பட்சத்தில் ஒவ்வொரு வீரருக்கும் தலா 250,000 வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது கட்டத்தில் வெற்றியீட்டினாலும் இதே தொகை வழங்கப்படவுள்ளது. இலங்கை அணி அடுத்து சுற்றுக்கு முன்னேறும் பட்சத்தில் வீரர்களுக்கு மேலும் 250,000 வழங்கப்படவுள்ளது. யெமனுக்கு எதிரான இரண்டாம் கட்டப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி கொழும்பு, குதிரைப்பந்தய திடலில் நடைபெறவுள்ளது.

இலங்கை குழாம்: சுஜான் பெரேரா, பிரபாத் ருவன் அருணசிறி, நிகலஸ் ஹர்ஷ பெர்னாண்டோ, சரித் பண்டார ரத்னாயக்க, சலன சமீர, ஆசிகுர் ரஹுமான், பைசர் மொஹமட் அமான், கவீஷ் லக்பிரிய பெர்னாண்டோ, ஷெஹால் சந்தோஷ் பிங்கோ, மரியதாஸ் நிதர்ஷன், நௌஷாத் அபீல் மொஹமட், ஜூட் சுபன், பைசல் மொஹமட் ஆகிப், வசீம் ராசிக், நசீர் மொஹமட் ஷிபான், சதுரங்க மதுஷன், மொஹமட் ஷபீர், சமோத் டில்ஷான், ரிப்கான் மொஹமட், கவிந்து இஷான், நைசர் மொஹமட் பஸால், சேனன் டி சில்வா மற்றும் ஆரிஸ் மொஹமட் ஹஸ்மீர்.

## ரிட்ஸ்பரி சுப்பர் 16 கண்டியில்



ரிட்ஸ்பரி சுப்பர் 16 கனிஷ்ட ரக்பி போட்டியின் நான்காவது சுற்று போட்டிகள் எதிர்வரும் ஒக்டோபர் 22 ஆம் திகதி கண்டியில் நடைபெறவுள்ளது.

கடந்த செப்டெம்பர் 3ஆம் திகதி முதல் கொழும்பு ரோயல் கல்லூரி விளையாட்டுத் தொகுதியில் முதல் மூன்று சுற்றுகள் நடைபெற்றதோடு இதர சுற்றுகள் செப்டெம்பர் 17 மற்றும் ஒக்டோபர் 1ஆம் திகதிகளில் நடைபெற்றன.

சுப்பர் 16 கனிஷ்ட ரக்பி போட்டி 14ஆவது தடவையாக தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்படுவதுடன், 44 பாடசாலைகளின் 112 அணிகள் பங்கேற்றுள்ளன. இந்த அணிகள் 10 மற்றும் 12 வயதுக்குட்பட்ட பிரிவுகளில் போட்டியிடுகின்றன. இதற்கு மூன்றாவது ஆண்டாகவும் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் விருப்பத்துக்குரிய சொக்லட் வர்த்தக நாமமான ரிட்ஸ்பரி அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மர்ஹூம் ஜாபீர் கிண்ணம் லயன்ஸ் ஸ்டார் வசமானது

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று பதுர் விளையாட்டு கழகம் நடாத்திய மர்ஹூம் ஜாபீர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று லயன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. 35 கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி அக்கரைப்பற்று பதுர் விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை (04) நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டியில் சொகமோ விளையாட்டுக் கழகத்தை லயன்ஸ் ஸ்டார் அணி வீழ்த்தியது.

இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று மாநகர முன்னாள் முதல்வர் ஏ.அஹமட் சகி வெற்றிக் கிண்ணத்தை லயன்ஸ் ஸ்டார் அணிக்கு வழங்கினார்.

## ஆரம்பப் போட்டியில் காலியாக இருந்த அஹமதாபாத் மைதானம்



உலகக் கிண்ண ஆரம்பப் போட்டி நடந்த அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி அரங்கு பார்வையாளர்கள் இன்றி காலியாக இருந்தது பலரது அவதானத்தை பெற்றுள்ளது.

1 லட்சத்து 32 ஆயிரம் இருக்கைகள் கொண்ட இந்த மைதானத்தில், எத்தனை இருக்கைகள் நிரம்பியிருந்தன என்பது பற்றிய சரியான எண்ணிக்கை இன்னும் கிடைக்கவில்லை. ஆனால், போட்டியின் காட்சிகளிலும், புகைப்படங்களிலும் பல இருக்கைகள் காலியாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

போட்டி நடந்தது வாரத்தின் மத்தியில், பிற்பகல் நேரத்தில். அதேபோன்று இந்தியா விளையாடாததாலும் போட்டிக்கு குறைவான ஆட்களே திரண்டிருந்ததாக கூறப்பட்டது.

சிலரின் கூற்றுப்படி, அஹமதாபாத்திற்குப் பதிலாக மும்பை வான்கடேவில் போட்டியை நடத்தியிருந்தால், இது போன்ற ஒரு சூழ்நிலை வந்திருக்காது என்று குறிப்பிடப்படுகிறது.

எனினும், ஒக்டோபர் 14ஆம் திகதி இதே அரங்கில் நடைபெறவிருக்கும் இந்தியா–பாகிஸ்தான் போட்டிக்கு மைதானம் முழுவதும் நிரம்பி வழியும் என்று கிரிக்கெட் ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் என்று கூறப்படும் நரேந்திர மோடி அரங்கு 2020 ஆம் ஆண்டு பெரும் ஆரவாரத்துடன் திறக்கப்பட்டது.

63 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மைதானத்தில் 1 லட்சத்து 32 ஆயிரம் பேர் அமரும் வசதி உள்ளது. எனவே, 20,000 பார்வையாளர்கள் இருந்தால்கூட, இந்த மைதானம் ஒப்பீட்டளவில் காலியாக இருப்பதுபோலவே தோன்றும்.

## குறிப்புகள்

## இங்கிலாந்தின் அபூர்வ சாதனை

இந்தியாவில் ஆரம்பமான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிராக நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் (05) நடைபெற்ற இந்தப் போட்டியில் இடம்பெற்ற சாதனைகள் வருமாறு,

★ இங்கிலாந்து நிர்ணயித்த 283 ஓட்ட வெற்றி இலக்கை நியூசிலாந்து அணி 36.2 ஓவர்களிலேயே எட்டியது. ஒருநாள் உலகக் கிண்ண வரலாற்றில் 250 க்கும் மேற்பட்ட வெற்றி இலக்கொன்றை வேகமாக எட்டிய சந்தர்ப்பமாக இது சாதனை படைத்தது. இதற்கு முன் 2015 இல் அயர்லாந்துக்கு எதிராக இந்தியா 260 ஓட்ட வெற்றி இலக்கை 36.5 ஓவர்களில் எட்டியது சாதனையாக இருந்தது.

★ நியூசிலாந்து அணி 82 பந்துகளை மிச்சம் வைத்தே வெற்றி இலக்கை எட்டியது. அதாவது ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 250க்கும் மேற்பட்ட வெற்றி இலக்கொன்றை அடைந்து பெற்ற மிகப் பெரிய வெற்றியாகவும் இது இருந்தது. இதற்கு முன் இந்த ஆண்டு ஆரம்பத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 261 ஓட்ட வெற்றி இலக்கை தென்னாபிரிக்க அணி 123 பந்துகளை மிச்சம் வைத்து எட்டியதே சாதனையாக இருந்தது.

★ நியூசிலாந்து ஒருநாள் மற்றும் டி20 உலகக் கிண்ணங்களின் ஆரம்பப் போட்டியில் தோற்பது மிக அரிதாகும். அதாவது அந்த அணி இதுவரை ஆடிய 21 உலகக் கிண்ண ஆரம்பப் போட்டிகளில் மூன்றில் மாத்திரமே தோற்றிருக்கிறது.

★ இங்கிலாந்து வெற்றி இலக்கை துரத்திய நியூசிலாந்து அணி சார்பில் டெவொன் கொன்வோய் மற்றும் ரச்சின் ரவிந்திரா இரண்டாவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாது 273 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். இது உலகக் கிண்ணத்தில் நான்காவது அதிகூடிய இணைப்பாட்டமாகும். அதேபோன்று நியூசிலாந்து உலகக் கிண்ணத்தில் பெற்ற அதிகூடிய இணைப்பாட்டமும் இதுவாகும்.

★ இதன்போது கொன்வோய் ஆட்டமிழக்காது பெற்ற 152 ஓட்டங்களும் நியூசிலாந்து அணி வீரர் உலகக் கிண்ணத்தில் பெற்ற மூன்றாவது அதிகூடிய ஓட்டங்களாகும். 2015 இல் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக மார்டின் கப்டில் ஆட்டமிழக்காது பெற்ற 237 ஓட்டங்கள் மற்றும் 1975 இல் கிழக்கு ஆபிரிக்காவுக்கு எதிராக கிளென் டியுனர் ஆட்டமிழக்காது பெற்ற 171 ஓட்டங்களும் இதன் முதலிரு இடங்களிலும் உள்ளன.

★ இந்த போட்டி நடைபெற்ற கடந்த வியாழனன்று ரவிந்திராவின் வயது 23 ஆண்டுகள் 321 நாட்கள் என்பதோடு இதன்மூலம் அவர் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் சதம் பெற்ற இளம் நியூசிலாந்து வீரராக சாதனை படைத்தார். முன்னதாக நெதன் அஸ்ட்லே 1996 ஆம் ஆண்டு அஹமதாபாத்தில் இங்கிலாந்துக்கு எதிராக 101 ஓட்டங்களை பெற்றபோது அவரது வயது 24 ஆண்டுகள் மற்றும் 152 நாட்களாக இருந்தது. அதேபோன்று விராட் கொஹ்லி மற்றும் அன்டி பிளவருக்கு அடுத்து உலகக் கிண்ணத்தில் ஆடிய முதல் போட்டியிலேயே சதம் பெற்றவராகவும் ரவிந்திரா இடம்பிடித்தார்.

★ அதேபோன்று உலகக் கிண்ணத்தில் ஒரே போட்டியில் சதம் பெற்ற முதல் நியூசிலாந்து ஜோடியாகவும் கொன்வோய் மற்றும் ரவிந்திரா பதிவாகினர். அதேபோன்று தனது முதல் உலகக் கிண்ண போட்டியில் ஆடும் இருவர் ஒரே போட்டியில் சதம்பெற்ற முதல் சந்தர்ப்பமாகவும் இது பதிவானது.

★ கொன்வோய்க்கு முன்னர் உலகக் கிண்ண கன்னிப் போட்டியில் ஆடிய மூவர் 150 க்கு மேல் ஓட்டங்களை பெற்றுள்ளனர். 1996இல் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிராக கரி கேஸ்டன் பெற்ற 188 ஓட்டங்களும் இந்த வரிசையில் முதலிடத்தில் இருப்பதோடு 2003 இல் நமிபியாவுக்கு எதிராக கிரேக் விஷார்ட் ஆட்டமிழக்காது பெற்ற 172 ஓட்டங்கள் மற்றும் 1975 இல் டியுனர் அட்டமிழக்காது பெற்ற 171 ஓட்டங்களும் காணப்படுகின்றன.



★ அஹமதாபாத்தில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான போட்டி வரை 2015 இல் பங்களாதேஷுக்கு எதிராக கப்டில் 88 பந்துகளில் சதம் பெற்றதே உலகக் கிண்ணத்தில் நியூசிலாந்து வீரர் ஒருவரின் வேகமான சதமாக இருந்தது. எனினும் கொன்வோய் 83 பந்துகளில் சதம்பெற்று கப்டிலின் சாதனையை முறியடிக்க பின்னர் ரவிந்திரா 82 பந்துகளில் சதம் பெற்று அந்த சாதனையை முறியடித்தார்.

★ நியூசிலாந்து சுழற்பந்து வீச்சாளர் மிச்சல் சான்ட்னர் தனது 10 ஓவர்களுக்கும் ஒரு பௌண்டரியைக் கூட விட்டுக்கொடுக்கவில்லை. இதன்மூலம் 2018 இல் குல்திப் யாதவுக்கு பின்னர் இங்கிலாந்துக்கு எதிராக 10 ஓவர்களுக்கும் ஒரு பௌண்டரி கூட விட்டுக் கொடுக்காத பந்துவீச்சாளராக அவர் இடம்பிடித்தார்.

★ ஒருநாள் சர்வதேச போட்டிகளில் கொன்வோய் 1000 ஓட்டங்களை பூர்த்தி செய்ய 22 இன்னிங்ஸ்கள் தேவைப்பட்டுள்ளது. இது நியூசிலாந்து வீரர் ஒருவரின் வேகமான 1000 ஓட்டங்களாகும். முன்னதாக டியுனர் 24 இன்னிங்ஸ்களில் இந்த மைல்கல்லை எட்டி சாதனை படைத்திருந்தார்.

★ இந்தப் போட்டியில் இங்கிலாந்தின் பதினொரு துடுப்பாட்ட வீரர்களும் இரட்டை இலக்க ஓட்டங்களை பெற்றிருந்தனர். இது ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் 11 துடுப்பாட்ட வீரர்களும் 10க்கும் மேற்பட்ட ஓட்டங்களை பெற்ற முதல் சந்தர்ப்பமாக பதிவானது.